# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 21 | විෂයය<br>பாடம் | பொருளியல் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 3 | 31. | 5 | 41. | 1 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 4 | 32. | 1 | 42. | 1 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 3 | 33. | 2 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 4 | 34. | 3 | 44. | 2 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 2 | 35. | 2 | 45. | 3 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 3 | 36. | 2 | 46. | 3 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 | 47. | 2 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 5 | 38. | 4 | 48. | 2 |
| 09. | 4 | 19. | 1 | 29. | 3 | 39. | 4 | 49. | 3 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 4 | 40. | 2 | 50. | 2 |

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

1. (i) ஒரு பொருளாதாரத்தில் வள ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகள் எழுவது ஏன்? (03 புள்ளிகள்)
(ii) மீள்புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்பதனால் கருதப்படுவது என்ன? இவ்வாறான வளங்களுக்கு ஓர் உதாரணம் தருக. (03 புள்ளிகள்)
(iii) உற்பத்திச் செயன்முறையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு தொழிற்பிரிப்பு எவ்வாறு பங்களிக்கும்? (04 புள்ளிகள்)
(iv) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் நான்கு பிரதான குறைபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(v) "ஒரு பொருளாதாரமானது உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது தான் இருக்கும் இடம் குறித்து நிகழ்காலத்தில் மேற்கொள்ளும் தெரிவானது பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் ஒரு பிரதான காரணியாகும்." வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) ஒரு பொருளாதாரத்தில் வள ஒதுக்கீட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகள் உச்ச எண்ணிக்கையிலான விருப்பங்களைப் பூர்த்தி செய்ய அருமையான வளங்களின் முழுமையானதும் வினைத்திறனானதுமான பயன்பாடு பற்றிய பிரச்சினைகள் அல்லது தெரிவு பற்றிய பிரச்சினைகளாகும். ஒரு பொருளாதாரத்தில் வள ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினைகள் பிரதானமாக அருமைத்தன்மையின் பிரசன்னம் காரணமாக எழுகின்றன.
**(01 புள்ளி)**

- மாற்றமடையும் சுவைகள் தெரிவுகள் மற்றும் தோற்றம் பெறும் தேவைகளால் பொருள்கள் சேவைகளுக்கான மனித விருப்பங்கள் பெரும்பாலும் எல்லையற்றனவாகும். இதன் காரணமாக இப்பல்வகைப்பட்ட விரிவடைந்து செல்லும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக வளங்களின் மீது தொடர்ச்சியாக அழுத்தங்கள் ஏற்படுகின்றன. இந்த உள்ளார்ந்த அருமைத்தன்மையானது வளஒதுக்கீட்டின் போது தெரிவுகளையும் விட்டுக்கொடுக்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன
**(01 புள்ளி)**

- **வளங்கள் மாற்றுப் பயன்பாடுடையனவாகும்.** வளங்கள் அருமையானவை மாத்திரமன்றி மாற்றுப்பயன்பாடுடையனவாகும் வளங்களின் மாற்றுப்பயன்பாடுகள் மத்தியில் ஒரு தெரிவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தெரிவுப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்கிறது.

- **வளங்களின் பல்வகைத்தன்மை:** தரம் இட அமைவு பல்வேறு நோக்கங்களுக்குப் பொருந்தும் தன்மை என்பவற்றின் அடிப்படையில் வளங்கள் வேறுபடுகின்றன. வளங்களின் இப்பல்வகைத்தன்மையானது பல்வேறுபட்ட தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய அவற்றை வினைத்திறானாக ஒதுக்கீடு செய்வதை சவாலானதாக ஆக்குகிறது

- **தகவல்களின் சமச்சீரின்மை:** பல சந்தர்ப்பங்களில் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் வளங்களின் கிடைப்பனவு மற்றும் பொருத்தமான தன்மை பற்றிய தகவல்களைக் கொண்டிருப்பதில்லை. இத்தகவல் இடைவெளியானது வளஒதுக்கீட்டுத் தீர்மானங்களில் வினைத்திறனற்றின்மைக்கு இட்டுச் செல்லலாம்.

- **சந்தை நிறைவில் தன்மைகள்:** தனியுரிமை சிலருரிமை வெளிவாறிகள் மற்றும் பொதுப்பொருள்கள் சந்தையின் நிறைவிலாத் தன்மைகளும் வளஒதுக்கீட்டை பிறழ்வுபடுத்துவதோடு அவற்றின் உத்தமப்பயன்பாட்டையும் தூரமாக்குகிறது.

- **பங்கீடு பற்றிய கரிசனைகள்:** வளஒதுக்கீட்டுத் தீர்மானங்கள் சமூக நீதி மற்றும் வருமானப்பங்கீடு பற்றிய கரிசனைகளாலும் செல்வாக்குப்படுத்தப்படுகின்றன. பொருளாதார முறைமைகள் வள ஒதுக்கீட்டில் சமத்துவம் மற்றும் நியாயத்துவம் பற்றிய வினாக்களோடு அடிக்கடி போராடவேண்டியுள்ளது.

- **கலாசார மற்றும் தாபன ரீதியிலான காரணிகள் :** சமூக விழுமியங்கள் கலாசாரப் பெறுமானங்கள் மற்றும் தாபன ரீதிலான கட்டமைப்புகள் என்பவை வளஒதுக்கீட்டில் கணிசமான பங்குவகிக்கின்றன. இக்காரணிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒன்றில் வளஒதுக்கீட்டை வசதிப்படுத்தலாம் அல்லது தடையாக அடையலாம்.
- **அரசியல் மற்றும் சிறப்புக் கரிசனைகள்:** அரசியல் கரிசனைகளும் விசேட கரிசனை கொண்ட குழுக்களின் செல்வாக்குகளும் சிலகுழுக்களுக்கு அல்லது கைத்தொழில்களுக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் அத்தகைய தீர்மானங்கள் அவை பொருளாதார ரீதியில் வினைத்திறனற்றதாக இருப்பினும் கூட மேற்கொள்ளப்படுவதற்கு ஏதுவாகின்றன

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)**

(ii) - புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்பவை காலப்போக்கில் இயற்கைச் செயன்முறையின் அல்லது மனித தலையீட்டின் மூலம் புதுப்பிக்கப்படத்தக்க அல்லது மீளமைக்கத்தக்க இயற்கை வளங்களாகும்.

**(01 புள்ளி)**

- இத்தகைய வளங்கள் பேண்தகு தன்மையுடையதாகக் கருதப்படும் ஏனெனில் அவற்றின் கையிருப்பு முழுமையாகத் தீர்ந்து விடாமல் அவற்றை பயன்படுத்த அல்லது சுரண்ட முடிவதனாலாகும்.

**(01 புள்ளி)**

- **உதாரணங்கள்:**

  சூரிய வலு புவி வெப்ப வலு காற்றின் வலு அலைகளின் வலு உயிரியல் வலு மரம் மற்றும் செடிகளை அடிப்படையாகக் கொண்ட இழைகள் கடலில் உள்ள மீன்கள் உயிரியல் வலு

  சூரிய வெளிச்சம் புள்ளி வழங்கப்பட மாட்டாது.

**(ஒரு உதாரணத்திற்கு 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)**

(iii) - தொழிற்பிரிப்பானது பல முக்கிய பொறிமுறைகளூடாக உற்பத்திச் செயன்முறையில் விளைதிறனுக்கும் வினைத்திறனுக்கும் பங்களிக்கிறது:

- **சிறக்குமியல்பு:** தொழிலாளர்கள் குறிப்பான இலக்குகளையோ செயன்முறைகளையோ செய்றபடுத்தும் போது காலப்போக்கில் அதிக திறமையானவர்களாகவும் வினைத்திறன் மிக்கவர்களாகவும் மாறுவர் இச்சிறக்குமியல்பானது அவர்கள் தமது வேலையை விரைவாகவும் சரியாகவும் செய்துமுடிக்க ஏதுவாகிறது.

- **திறன் பிரதி செய்யப்படுவதைக் குறைக்கிறது:** ஒவ்வொரு தொழிலாளரும் பரந்த வீச்சிலான திறன்களில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டிய தேவைக்குப்பதிலாக ஒரு குறுகிய எண்ணிக்கையிலான திறன்களில் தேர்ச்சியடைய கவனஞ் செலுத்தலாம். இது தொழிற்படை மத்தியில் திறன் விரிவாக்கத்திற்கான நேரத்தையும் முயற்சியையும் குறைக்கிறது .

- **நேர வினைத்திறன் :** தொழிலாளர்கள் சிறக்குமியல்பு அடையும் போது அவர்கள் அடிக்கடி பல்வேறு செயற்பாடுகளை மாறிமாறிச் செய்ய வேண்டியதில்லை. இது செய்பாடுகள் மத்தியில் தொழிலாளர்களை மாறி மாறி ஈடுபடுத்தும் நேரவிரயத்தைக் குறைத்து வேலைகள் செம்மையாக நடைபெறச் செய்கிறது

- **அளவுத்திட்டச் சிக்கனங்கள்:** சிறக்குமியல்பானது பெரும்பாலும் பேரளவு உற்பத்திக்கு இட்டுச் செல்கிறது. இது அளவுத்திட்டச் சிக்கனங்களுக்கு இட்டுச் செல்லும். உற்பத்தியின் பருமன் அதிகரிக்கும் போது ஓரலகு வெளியீட்டிகான செலவு குறைவடைந்து உற்பத்திச் செயன்முறை வினைத்திறன் மிக்கதாக மாறும்.

- **புத்தாக்கமும் தொழில் நுட்பமும்:** தொழிலாளர்கள் குறிப்பான வேலைகளில் சிறக்குமியல்பு அடையும் போது அவ்வேலைகளை ஒழுங்காகவும் முன்பைவிட மேம்பாடுடையதாகவும் செய்யும் வழிகளைக் கண்டறிவர். இது புத்தாக்கங்களுக்கும் புதிய தொழில் நுட்பக் கண்டு பிடிப்புகளுக்கும் அல்லது வினைத்திறனை மேம்படுத்தக்கூடிய தொழில் நுட்பக்கண்டுபிடிப்புகளுக்கும் இட்டுச் செல்லும்.

- **தரநியமப்படுத்தல் :** தொழிற்பிரிப்பானது தரநியமப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கும் செயன்முறைகளுக்கும் இட்டுச் செல்லலாம் இது உற்பத்தியின் வேறுபடும் தன்மையினைக்குறைக்கும். இந்த நிலைத்த தன்மையானது உற்பத்தியின் தரமேம்பாட்டை அதிகரிப்பதோடு பிழைகள் ஏற்படுவதைக்குறைக்கும்.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி எவையேனும் 4 காரணிகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) **ஊக்குவிப்பின்மை:** கட்டளைப் பொருளாதாரங்களில் சந்தைப் பொருளாதாரங்களில் உள்ளது போல் தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு உறுதியான நிதிசார் ஊக்குவிப்பகள் போதியளவில் காணப்படுவதில்லை. உற்பத்தித் தீர்மானங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுவதால் புத்தாக்கங்கள், வினைத்திறன், கடின உழைப்பு என்பவற்றிற்கு குறைவான முயற்சியே இருக்கும்.

- **தவறான வள ஒதுக்கீடு:** மத்திய திட்டமிடலாளர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வளங்களை வினைத்திறனாகவோ அல்லது நுகர்வோரின் விருப்பங்களுக்கு அமைவாகவோ ஒதுக்கீடு செய்வதில்லை. அதன் விளைவாக அவசியமற்ற பொருள்களின் மிகை உற்பத்தியும் அதிக விருப்புக்குரிய பொருள்களின் பற்றாக்குறையும் ஏற்படும். தவறான வளஒதுக்கீடு பொருளாதார வினைத்திறனின்மைக்கும் வளவிரயத்திற்கும் இட்டுச்செல்லலாம்.

- **அதிகாரத்துவ வினைத்திறனின்மை:** கட்டளைப்பொருளாதாரங்கள் தீர்மானம் மேற்கொள்வதற்கு பெரிய அதிகாரத்துவ அமைப்புகளைக் கொண்டுள்ளன. இது தீர்மானம் மேற்கொள்வதை மந்த கதியிலான சிக்கல்வாய்ந்த ஊழல் மிக்கதாகவும் மாற்றிவிடும். இவ்வினைத்திறனின்மை பொருளாதார வளர்ச்சியையும் மாற்றமடையும் நிலைமைகளுக்கு ஏற்ப துலங்கும் தன்மையையும் தடை செய்யலாம்.

- **நுகர்வோர் தெரிவுகள் குறைவாக இருத்தல்:** கட்டளைப் பொருளாதாரங்களில் பொருள்கள் சேவைகளைப் பொறுத்தவரை நுகர்வோர் வரையறுக்கப்பட்ட தெரிவுகளையே கொண்டிருப்பர். அரசாங்கம் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதால் சந்தையில் பொருள்களின் வகைகள் குறைவாகவும் புத்தாக்கங்கள் குறைவாகவும் இருப்பதுடன் நுகர்வோரின் திருப்தியின்மைக்கும் இட்டுச்செல்லும்.

- **மாற்றமுறும் நிலைமைகளுக்கு ஏற்ப துலங்கலை ஏற்படுத்துவது கடினமானது:** கட்டளைப் பொருளாதாரங்கள் மாற்றமடைந்து செல்லும் பொருளாதார நிலைமைகளுக்கும் தொழில் நுட்ப முன்னெற்றங்களுக்கும் ஈடுகொடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றன. பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் நெருக்கடிகள் அல்லது புதிதாக ஏற்படும் வாய்ப்புகள் என்பவற்றிற்கு உரிய துலங்கலை உடனடியாக மேற்கொள்வதை மத்திய திட்டமிடலின் இறுக்கமான தன்மையானது சவால் மிக்கதாக மாற்றுகிறது.

- விலைக்கட்டுப்பாடுகள் காரணமாக கறுப்புச் சந்தைகள் உருவாகலாம்.
- அரசாங்கத் தனியுரிமைகள்: போட்டியில்லாத நிலைமையானது வள ஒதுக்கீட்டில் வினைத்திறனற்ற நிலையினை ஏற்படுத்தும் .
- மந்த கதியிலான பொருளாதார வளர்ச்சி

**(ஒரு குறைப்பாட்டிற்கு 01 புள்ளி ஏதேனும் 04 குறைப்பாடுகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(v) - உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது நிகழ்காலத்தில் ஒரு பொருளாதாரத்தின் இருப்பிடங்கள் பற்றிய தெரிவானது எதிர்காலத்தில் அவ்வளையியின் இடஅமைவைத் தீர்மானிக்க உதவும். மூலதனப்பொருள்கள் நுகர்வுப்பொருள்கள் ஆகிய இரு பொருள்களைஉ றப்த்தி செய்யுக் கூடிய ஒரு பொருளாதாரத்தைக் கருதுக. உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது அது நுகர்வுப்பொருள் மற்றும் மூலதனப் பொருள் ஆகியவற்றின் வெவ்வேறு சேர்க்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தப்புள்ளியையும் தெரிவு செய்யலாம். நிகழ்கால உற்பத்திக்காக அதிகளவு நுகர்வுப்பொருள்கள் மீதும் குறைந்தளவு மூலதனப்பொருள்கள் மீதும் கவனம் செலுத்துமாயின் பொருளாதாரத்திலுள்ள மக்கள் நிகழ்காலத்தில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கமுடியும். ஆனால் எதிர்காலத்தில் பொருள்கள் சேவைகளின் உற்பத்தியை மேம்படுத்தக் கூடிய இயலுமை மிகவும் பலவீனமாக இருக்கும். மூலதனப் பொருள்கள் பொருளாதார வளர்ச்சிக்கான சேர்மானங்களாகும். மூலதனப்பொருள்களுக்குக் குறைவான வளங்களை ஒதுக்குவதனால் எதிர்காலத்தில் உற்பத்தி இயல்தகவு வளையியின் வெளிப்புற நகர்வு சிறிய இடைவெளியுடையதாக இருக்கும் அது மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியை குறித்துக் காட்டும்.

(01 புள்ளி)

- இந்நிலைமை வரைபடம் (a). இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அதிகளவு நுகர்வுப்பொருள்களையும் குறைந்தளவு மூலதனப்பொருள்களையும் உற்பத்தி செய்யும் புள்ளி P ஆகும். இதன்போது எதிர்காலத்தில் உற்பத்தி இயல்தகவு வளையியின் குறைந்தளவு வெளிப்புற நகர்வு இடம்பெறும்.

வரைபடம் (a)




(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

A. நிகழ்காலத்தில் நுகர்வுப்பொருள்களைவிட கைத்தொழில் பொருள் உற்பத்திக்கு அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு நாடு எதிர்காலத்தில் இருவகைப்பொருள்களையுமே அதிகளவில் கொண்டிருக்கும் வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நாடு அதிக பொருளாதார வளர்ச்சியை அனுபவிக்கும். ஏனெனில் நுகர்வுப்பொருள்கள் நிகழ்காலத்தேவைகளைப் புர்த்தி செய்யப்பயன்படும் அதேவேளை மூலதனப் பொருள்கள் எதிர்காலத்தேவைகளைப் பூர்த்தி செய்யப்பயன்படும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பொதுவாக நிகழ்கால நுகர்வைத் தியாகம் செய்வதை உள்ளடக்கியுள்ளது.

(01 புள்ளி)

வரைபடம் (b)




(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

வரைபடம் (b) யானது F புள்ளியில் அதிகளவு மூலதனப் பொருள்களையும் குறைந்தளவு நுகர்வுப் பொருள்களையும் உற்பத்தி செய்யும் ஒரு நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையி எந்தளவு வெளிப்புறமாக நகரும் என்பதை காட்டுகிறது.

இது உற்பத்தி இயல்தகவு வளையியில் பெரியளவு வெளிப்புற நகர்வை ஏற்படுத்துவதோடு உயர் பொருளாதார வளர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.

**(மொத்தம் 06 புள்ளிகள்)**

2. (i) ஒரு சாதாரண பொருள், ஒரு இழிவுப் பொருள், ஒரு கிபன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக. (03 புள்ளிகள்)
(ii) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலையின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) ஒரு நிரம்பல் வளையி நேர்க்கணிய சாய்வுடையதாக இருப்பதற்கான இரு காரணங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)
(iv) ஒரு நேர்கோட்டு கேள்வி வளையி அதன் உயர் விலை வீச்சினுள் அதிக விலை நெகிழ்வுள்ளதாகவும் குறைவான விலை வீச்சினுள் அதிக விலை நெகிழ்வற்றதாகவும் இருப்பது ஏன்? (04 புள்ளிகள்)
(v) (அ) ஒரு விலை மாற்றத்தின் வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)
(ஆ) அவை கேள்வி விதியுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன? (04 புள்ளிகள்)

(i) **சாதாரண பொருட்கள் :** நுகர்வோர் வருமானம் அதிகரிக்கும் போது கேள்வித் தொகை அதிகரிக்கும் பொருட்கள் சாதாரண பொருட்களாகும். வருமானம் குறையும் போது இவற்றின் கேள்வித் தொகை வீழ்ச்சியடையும். இவை நேர்க்கணிய வருமானக் கேள்வி நெகிழ்ச்சி கொண்டவையாகும். வருமானம் அதிகரிக்கும் போது இவற்றின் கேள்வியும் அதிகரிக்கும்.

**(01 புள்ளி)**

**இழிவுப் பொருட்கள் :** நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் போது கேள்வித் தொகை குறைவடையும் வகையிலான பொருட்களாகும். (மறுதலை உண்மையாகும்) இழிவுப் பொருட்கள் எதிர்கணிய வருமானக் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும். வருமானம் அதிகரிக்க கேள்வித் தொகை வீழ்ச்சியடையும்.

**(01 புள்ளி)**

**கிபன் பொருட்கள் :** கிபன் பொருட்கள் விசேட வகையிலான இழிவுப் பொருட்களாகும். மாறுபட்ட விதத்தில் ஏனைய மாற நிலையில் இவற்றின் விலைகள் அதிகரிக்கும் போது இவற்றின் கேள்வித் தொகை அதிகரிக்கும். (மறுதலை உண்மையாகும்)

**(01 புள்ளி)**

**(மொத்தம் 03 புள்ளிகள்)**

(ii) **பங்கீட்டுச் செயற்பாடு :** விலைகள் அருமையான வளங்களின் பங்கீட்டிற்கு உதவுகிறது.

**(01 புள்ளி)**

**சமிக்ஞை வழங்கும் தொழிற்பாடு :** ஒரு பொருளுக்கு சந்தையில் நிலவும் சார்பு ரீதியான அருமை தன்மை அல்லது மிகையாகச் கிடைக்கும் தன்மை பற்றிய சமிக்ஞைகளை உற்பத்தியாளருக்கு நுகர்வோருக்கும் வழங்குகிறது.

**(01 புள்ளி)**

- உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் **ஊக்குவிப்புக்களை வழங்குகிறது.**

ஒரு குறித்த பொருளின் விலை அதிகரிக்குமாயின் அது உற்பத்தியாளருக்கு அதனை நுகர்வோர் அ கம் விரும்புகிறார்கள் என்ற சமிக்ஞையை வழங்கும். இது உற்பத்தியாளர்கள் அதனைக் கூடுத ஆக உற்பத்தி செய்யத் தூண்டும். விலைகள் உயர்வாக இருக்கும் போது நுகர்வோர் விலை குறை பதிலீடுகளை நாடுவர் அல்லது நுகர்வைக் குறைப்பர்.

**(01 புள்ளி)**

விளக்கம் இல்லாவிடின் புள்ளி வழங்காதிருக்கவும்

**(மொத்தம் 03 புள்ளிகள்)**

(iii). **உற்பத்தியின் எல்லைச் செலவுகள் அதிகரிப்பு :** உற்பத்தி செய்யப்படும் தொகை அதிகரிக்கும் போது அதன் எல்லை உற்பத்திச் செலவு அதிகரிக்கும். வெளியீடு அதிகரிக்கும் போது எல்லைச் செலவு அதிகரிக்க இரண்டு காரணங்கள் உண்டு.

- **அதிகரிக்கும் அமையச் செலவு விதி :** இவ் விதியின் படி ஒரு பொருளின் உற்பத்தி அதிகரிக்கும் போது அப் பொருட்களின் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு அதிகரிக்கும் ஏனெனில் வளங்கள் எல்லா உற்பத்திக்கும் ஒரே விதமாக பொருத்தமாக இருப்பதில்லை. சில வளங்கல் ஒரு வகையான பொருள் உற்பத்திக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் அதே வேளை வேறு சில பொருத்தமற்றதாக இருக்கும்.

**(01 புள்ளி)**

- **குறைந்து செல்லும் எல்லை உற்பத்தி :** குறுங்காலத்தில் சில உற்பத்திக் காரணிகளை நியாயமாக வைத்துக் கொண்டு மாறுங் காரணிகளை மாற்றியமைப்பதன் மூலம் வெளியீடு அதிகரிக்கப்படுகிறது. இதன்போது ஈடுபடுத்தப்படும் மாறுங் காரணியின் ஒவ்வொரு மேலதிக அலகிற்குமான எல்லையுற்பத்தி குறைவடைந்து செல்லும். குறைவடைந்து செல்லும் எல்லை உற்பத்திச் செலவை அதிகரிக்கும். அதாவது உள்ளீட்டின் ஒவ்வெரு மேலதிக அலகிற்கும் மொத்த உற்பத்திக்கு குறைந்த அளவு பங்களிப்பையே செய்யும் இதனால் மேலதிக ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கான செலவு (எல்லைச் செலவு) அதிகரிக்கும். எனவே உற்பத்தியாளர்கள் அதிகளவு உற்பத்தி செய்ய அதிக விலைகளை எதிர்பார்ப்பர். குறைந்து செல்லும் விலையை ஈடு செய்வதே இதன் நோக்காகும்.

**(01 புள்ளி)**

- **தனி நிறுவனங்களின் இலாப நோக்கம் :** விலைகளின் அளவு இலாபத்தின் அளவை நிர்ணையிக்கும். ஒரு பொருளுக்கு உயர் விலை நிலவும் போது உற்பத்தியாளர் அதனை அதிகளவில் உற்பத்தி செய்யத் துண்டுதல் இருக்கும். ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது அப்பொருளை அதிகளவில் நிரம்பல் செய்வது நிரம்பலாளருக்கு இலாபகரமானதாகவிருக்கம்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) விலைக் கேள்வி நெகிழ்ச்சி சூத்திரத்தைப் பயன்படுத்துக.

$$\frac{\Delta Q}{\Delta P} x \frac{P}{Q}$$

**(01 புள்ளி)**

- உயர் விலை வீழ்ச்சினுள் $\frac{P}{Q}$ இல் விலையின் பெறுமானம் உயர்வாகவும் தொகையின் பெறுமானம் குறைவாகவும் இருக்கும்.

**(01 புள்ளி)**

- குறைந்த விலைவீச்சில் $\frac{P}{Q}$ இல் விலையின் பெறுமானம் குறைவாகவும் தொகையின் பெறுமானம் உயர்வாகவும் இருக்கும்.

**(01 புள்ளி)**

- $\frac{\Delta Q}{\Delta P}$ இன் பெறுமதி நிலையானதாக இருப்பினும் P/Q க்கு இடையிலான விகிதம் உயர் விலை வீச்சில் அதிகமாகவும் குறைந்த விலை வீச்சில் குறைவாகவும் இருக்கும்.

ஆகவே விலைக் கேள்வி நெகிழ்ச்சி உயர்விலை வீச்சில் அதிகமாகவும் குறைந்த விலை வீச்சி குறைவாகவும் இருக்கும்.

**(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

மாற்றீடான விடை

வரைபட முறையில் நெகிழ்ச்சியைக் கணிப்பிடும் போது குறிப்பிட்ட விலைக்கு மேலுள்ள கேள்வி வளையியின் பகுதிகளையும் அதற்குக் கீழுள்ள பகுதிகளையும் கருத்திற் கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகிறது.

(02 புள்ளிகள்)




( வரை படத்திற்கு 02 புள்ளிகள்)

இம் முறையின் படி வளையியின் நடுப்புள்ளிக்கு கீழுள்ள எப்புள்ளியிலும் நெகிழ்ச்சிக் குணகம் சிறிதாகவும் மேலுள்ள பகுதியில் பெரிதாகவும் இருக்கும்.

(மொத்தம் 04 புள்ளிகள்)

(V) (அ) **வருமான விளைவு**

ஏனையவை மாறா நிலையில் ஒரு பொருளின் விலைமாற்றம் காரணமாக மெய் வருமானத்தில் (கொள்வனவுச் சக்தி) ஏற்படும் மாற்றத்தினால் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றம் வருமான விளைவாகும்.

- ஒரு பொருளின் விலை குறைவினால் நுகர்வேருக்கு அப் பொருளை வாங்க அதிகளவு மெய் வருமானம் இருக்கும் இதனால் அவர்கள் அதிகளவு தொகைகளைக் கொள்வனவு செய்வதாகும் அல்லது வேறு பொருட்களை வாங்கலாம். (மறுதலை உண்மை)

(01 புள்ளி)

**பதிலீட்டு விளைவு:**

- ஏனைய பொருள் விலைகளுடன் ஒப்பிடுகையில் ஒரு பொருளின் விலை மாற்றம் காரணமாக (ஏற்படும் சார்பு விலை மாற்றம் காரணமாக) ஒரு பொருளின் கேள்வித் தொகை மாற்றமடையும்.
- ஒரு பொருள் விலை வீழ்ச்சியடையும் போது ஏனைய பொருட்களுடன் ஒப்பிடுகையில் அது மலிவானதாக மாறும். நுகர்வோர் மலிவாக மாறிய பொருளை விலை மாறாத ஏனைய பொருட்களுக்காக பதலீடு செய்வர் (மறுதலை உண்மை.)

(01 புள்ளி)

(ஆ)

கேள்வி விதியானது ஏனையன மாறா நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது குறைந்த தொகைகளுக்கும், விலை குறைவடையும் போது அதிக தொகைகளுக்கும் கேள்வி எழுப்பப்படும் என கூறுகிறது.

(02 புள்ளிகள்

கேள்வி விதியானது வருமான விளைவு பதிலீட்டு விளைவு என்பவற்றின் ஒரு கூட்டு விளைவாக கருதப்படலாம்.

ஒரு பொருளின் விலை குறைவடையும்போது அதன் கேள்வித் தொகை மேற்படி இரு விளைவுகள் காரணமாக அதிகரிக்கும். (மறுதலை உண்மை)

(02புள்ளிகள்

ஏதாவது ஒரு பக்கம் சரியாயினும் புள்ளி வழங்கவும்.

(மொத்தம் 06 புள்ளிகள்

3. (i) எத்தகைய சூழ்நிலையில் ஒரு பொருளின் மீதான அலகு வரியானது சந்தை விலை மற்றும் கொள்வனவு செய்யப்படும் தொகை ஆகிய இரண்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தாதிருக்கும்? உமது விடையை ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையானவையா? பொய்யானவையா? என விளக்குக.

(அ) நுகர்வோன் மிகையானது வரைபட ரீதியில் கேள்வி வளையிக்கு கீழும் நிரம்பல் வளையிக்கு மேலும் உள்ள பிரதேசத்தினால் காட்டப்படும்.

(ஆ) நிரம்பலில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி காரணமாக சந்தை விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு நுகர்வோன் மிகையை அதிகரிக்கும்.

(இ) கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி காரணமாக ஒரு பொருளின் சந்தை விலை வீழ்ச்சியடையுமாயின் மேலதிக உற்பத்தியாளன் மிகை உருவாக்கப்படும்.

($02 \times 03 = 06$ புள்ளிகள்)

(iii) நெல்லுக்கான சந்தைக் கேள்வி வளையி $Q_D = 120 - 0.5P$ ஆகவும் நெல்லுக்கான சந்தை நிரம்பல் வளையி $Q_S = -30 + P$ ஆகவும் இருப்பதாகக் கொள்க. (தொகை மில்லியன் அலகுகளில் தரப்பட்டுள்ளன.)

(அ) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு கிலோகிராமுக்கு ரூபா 120 குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து ஒரு 'விலை உதவித்திட்டத்தை' நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானிப்பதாகக் கொள்க. இச்சந்தையில் நிலவும் மிகை நிரம்பல் யாது? (02 புள்ளிகள்)

(இ) இத்திட்டத்தினால் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவு யாது? (02 புள்ளிகள்)

(ஈ) இவ்விலை உதவித் திட்டத்தின் காரணமாக ஏற்படும் மீளமுடியாத இழப்பின் (dead-weight loss) அளவினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(i) **சந்தையில் நிலவும் மிகவும் விசேடமான நிலையின் கீழ் ஒரு அலகுவரியானது சந்தை விலையிலும் கொள்வனவு செய்யப்படும் தொகையிலும் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாது விடலாம்.**

**நிரம்பல் பூரண நெகிழ்வற்றதாக உள்ளபோது மொத்த வரிச் சுமையையும் விற்பனையாளர் சுமக்க நேரிடும் சந்தை விலையும் கேள்வித் தொகையும் மாற்றமின்றிக் காணப்படும். வரியானது விற்பனையாளன் பெறும் விலையினைக் குறைக்கும்.**

**(02 புள்ளிகள்)**

**கீழுள்ள வரைபடம் பூரண நெகிழ்வற்ற நிரம்பல் வளையி (S) இனையும் சாதாரண கேள்வி வளையியையும் (D) காட்டுகிறது.**

**வரி அறவிடப்படாத போது விலை 50 ரூபாவாகும். கேள்வித் தொகை 5 ரூபா ஆகும். வரி விதித்தால் நிரம்பல் வளையியில் மாற்றம் இருக்காது. ஆனால் நிரம்பலாளர் பெறும் விலை 45 ஆகக் குறைவடையும். வரியானது நிரம்பலாளன் பெறும் விலையைக் குறைக்கும். வரி முழுவதும் நிரம்பலாளர் செலுத்துவர்.**




**சரியான வரைபடத்துடன் விளக்கத்திற்கு 02 புள்ளிகள்**
**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(i) (அ) பிழை: நுகர்வோர் மிகையானது வரைபடத்தில் கேள்வி வளையிக்கும் உட்புறமும் சந்தை விலைக்கு மேற்புறமும் உள்ள பிரதேசத்தினால் காட்டப்படும். இது நுகர்வோர் பொருளுக்கு வழங்கத் தயாரான அதிபட்ச விலைக்கும் செலுத்திய விலைக்கும் இடையிலான வேறுபாடாகும். ஆகவே இப்பிரதேசம் கேள்வி வளையிக்கு கீழும் நிரம்பல் வளையிக்கு மேலும் உள்ள பிரதேசமல்ல.

(02 புள்ளிகள்)

(ஆ) பிழை : நிரம்பலில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக சந்தைவிலையில் ஏற்படும் அதிகரிப்பு நுகர்வோர் மிகையை அதிகரிக்க முடியாது. நுகர்வோர் மிகையானது வரைபடத்தில் கேள்வி வளையிக்கு உட்புறமும் சந்தை விலைக்கு மேற்புறமும் உள்ள பிரதேசத்தினால் காட்டப்படும். நிரம்பல் வீழ்ச்சி காரணமாக விலை அதிகரிக்கும் போது கேள்வித் தொகை குறையும் இது நுகர்வோர் மிகையில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

(02 புள்ளிகள்)

(இ) பிழை : ஒரு பொருளின் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக அப்பொருளின் சந்தை விலை வீழ்ச்சியடையுமாயின் மேலதிக உற்பத்தியாளர் மிகையினை உருவாக்க முடியாது. கேள்வி வீழ்ச்சியடையும் போது குறைந்த விலைகளில் உற்பத்தியாளர் அதே தொகையினை வழங்க விரும்பமாட்டார்கள். இச் சந்தர்ப்பத்தில் உற்பத்தியாளர் மிகை வீழ்ச்சியடையும்.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 06 புள்ளிகள்)

(iii) (அ) QD ஐ QS இற்கு சமப்படும் போது

$120 - 0.5P = -30 + P$

$0.5P + P = 120 + 30$

$1.5P = 150$

$P = 150/1.5 = 100$ சமநிலை விலை

(01 புள்ளி)

சமநிலை தொகை

$Q_D = 120 - 0.5P$

$= 120 - 0.5(100)$

$= 120 - 50$

$Q_D = 70$ சமநிலை தொகை

சமநிலைத்தொகை 70 மில்லியன் அலகுகளாகும்

(01 புள்ளி)

(ஆ) தள விலை 120 ரூபாவாக உள்ள போது அரசாங்கம் நெல்லை விற்பனை செய்யக் கூடிய குறை பட்ச விலையை நிர்ணயிக்கிறது. மிகை நிரம்பலைக் கணிப்பதற்கு தள விலையின் போது கேள்வி தொகையினையும் நிரம்பல் தொகையினையும் ஒப்பிட வேண்டும்.

தளவிலையின் நிரம்பல் தொகை $= Qs = -30 + 120 = 90$

90 மில்லியன் அலகாகும்.

தளவிலையின் கேள்வித் தொகை $= Qd = 120 - 0.5(120)$

$60 = 120 - 60$

60 மில்லியன் அலகாகும்.

(01 புள்ளி)

மிகை நிரம்பல் = தளவிலையில் நிரம்பல் தொகை - தளவிலையில் கேள்வித் தொகை

$= 90 - 60 = 30$ மில்லியன் அலகுகள்

(01 புள்ளி)

(இ) திட்டத்திற்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவை மிகை நிரம்பலை தள விலையினால் பெருக்குவதன் மூலம் கணிப்பிடலாம்.

அரசாங்கத்திற்கான செலவு = மிகை நிரம்பல் X தளவிலை

= 30 மில்லியன் அலகுகள் X ரூபா 120

= 30 X 120 = 3600 மில்லியன் ரூபா

**(02 புள்ளிகள்)**

(ஈ) விலையுதவித் கொள்கை காரணமாக பொருளாதார வினைத்திறனில் ஏற்படும் இழப்பை மீளமுடியாத இழப்பு பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

தள விலை காரணமாக கேள்வி வளையிக்கும் நிரம்பல் வளையிக்கும் இடையில் உருவாகும் முக்கோணப் பகுதியினால் இது கணிப்பிடப்படும்.

இது மிகை உற்பத்தியினால் ஏற்படும் வினைத்திறனின்மையாகும்

தளவிலை நிரம்பல் தொகை - சமநிலைத் தொகை

90 - 70 = 20 அலகுகள்

**(01 புள்ளி)**

வினைத்திறனற்ற வெளியீட்டை அடுத்து உருவாகும் முக்கோணப்பகுதியின் அளவைக் கணிப்பிடுவதன் மூலம் மீள முடியாத இழப்பைக் கணிப்பிடலாம்.

மீள முடியாத இழப்பு = ½ X (வினைத்திறனற்ற வெளியீடு)

= ½ X (90 -70) X தளவிலையில் நிரம்பல் தொகையின் எல்லைச் செலவு

(B - K) = 120 - தளவிலையில் நிரம்பல் தொகையின் எல்லை நன்மை

(C- K)= 60

மீள முடியாத இழப்பு = ½ { 20 x (120 – 60)}

= ½ ( 20 x 60); 600 மில்லியன் ரூபா

**(01 புள்ளி)**




**(02 புள்ளிகள்)**

**( மொத்தப் 04 புள்ளிகள் )**

4. (i) கணக்கியல் இலாபத்திற்கும் பொருளியல் இலாபத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

(ii) சிலருரிமைச் சந்தையின் நான்கு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நிறைபோட்டிச் சந்தையில் உற்பத்தி நிறுவனம் ஒன்று விலையை ஏற்பவராக இருப்பதுடன், தனது உற்பத்திகள் விற்கப்படும் விலையைத் தெரிவுசெய்ய முடியாதிருப்பது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கரட்டுக்கான சந்தை நிறைபோட்டித் தன்மை வாய்ந்ததெனக் கொள்க. ஒரு கிலோகிராமின் சந்தை விலை ரூபா 200 ஆகும். சரத் என்ற கரட் பயிரிடும் விவசாயி ஒரு வாரத்தில் 50 கிலோகிராம் கரட்டை விற்பனை செய்கின்றார். ஒரு கிலோகிராமிற்கான அவரது எல்லைச் செலவு ரூபா 150 ஆகும்.

(அ) வாரம் ஒன்றிற்கான சரத்தின் மொத்த வருவாயையும் எல்லை வருவாயையும் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சரத் இலாபத்தை உச்சப்படுத்துகின்றாரா? உமது விடையை விளக்குக. (02 புள்ளிகள்)

(இ) கரட் கிலோகிராம் ஒன்றின் சந்தை விலை ரூபா 100 ஆக வீழ்ச்சியடைவதுடன், சரத் தனது வெளியீட்டினை வாரமொன்றிற்கு 30 கிலோகிராம்களாகக் குறைக்கின்றார். கிலோகிராம் ஒன்றிற்கான அவரது சராசரி மாறுஞ் செலவு 80 ரூபாவாகவும் எல்லைச் செலவு 100 ரூபாவாகவும் குறைவடைகின்றன. அவரது சராசரி நிலையான செலவு கிலோகிராம் ஒன்றிற்கு 40 ரூபாவாக அதிகரிக்கின்றது. அவர் இலாபத்தை உச்சப்படுத்துகின்றாரா? அவர் ஒரு பொருளியல் இலாபத்தை உழைக்கின்றாரா? அல்லது நட்டத்தை அனுபவிக்கின்றாரா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(i) **கணக்கியல் இலாபமானது மொத்த வருவாயிலிருந்து வெளிப்படைச் செலவுகளை (நேரடிச் செலவுக கழிப்பதன் கணிப்பிடப்படும் ஒரு நிதியில் அளவையாகும். அது நிறுவனத்தின் நிதியில் அறிக்கையி குறிப்பிடப்பட்டுள்ள இலாபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் பொதுவாக ஏற்றுக் கொள்ளப் கணக்கியல் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.**

**(02 புள்ளிகள்**

- **பொருளின் இலாபம் என்பது வெளிப்படையான செலவுகள் மற்றும் உள்ளார்ந்த செலவுகள் ஆகி இரண்டையும் கருத்தில் கொள்ளும் ஒரு பரந்த அளவையாகும். உள்ளார்ந்த செலவுகள் இழக்கப் வருமானங்கள் அல்லது வருவாய்கள் என்பவற்றை உள்ளடக்கும். வளங்கள் அவற்றின் அடு சிறந்த தெரிவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் பெற்றிருக்கக் கூடிய வருமானங்களாகும். உரிமையாளரி நேரம் மூலதனம் என்பன இவ்வகையினதாகும். வெளிப்படையான செலவுகளையும் உட்கிடையா செலவுகளையும் உள்ளடக்கிய செலவுகள் பொருளியல் செலவுகள் அல்லது அமையச் செலவுக என அழைக்கப்படும். பொருளியல் இலாபமானது மொத்த வருவாயிலிருந்து அமையச் செலவை கழிப்பதன் மூலம் கணிப்பிடப்படும்.**

(பயன்பாட்டின் மேல் தெளிவான விளக்கமிருந்தால் புள்ளி வழங்கவும்)

**(02 புள்ளிகள்**

**(மொத்தம் 04 புள்ளிகள்**

(ii) **சிலருரிமைச் சந்தையின் பண்புகள்**

- **நிறுவனங்களின் எண்ணிக்கை சிறிதாகும் ஆனால் நிறுவனத்தின் அளவு பெரிதாகும்.**
- **ஓரினத் தன்மை வாய்ந்த அல்லது வேறாக்கம் செய்யப்பட்ட பொருள் உற்பத்தி செய்யப்படும்.**
- **நிறுவனங்களுக்கிடையில் பரஸ்பர தங்கியிருத்தல் நிலவும்.**
- **உட்பிரவேசத் தடைகள் காணப்படல்.**
- **விலைகள் இறுக்கத் தன்மை வாய்ந்தவை.**
- **விலை சாராப் போட்டி நிலவும்.**
- **ஒப்பந்தங்கள் இடம்பெறல்**
- **முறிவு பட்ட கேள்வி வளையி காணப்படும்.**

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்**

iii) நிறை போட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் விலையை ஏற்போனாகக் கருதப்படும். ஏனெனில் சந்தை விலையில் அதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை. நிறுவனம் அது விற்பனை செய்யும் பொருளுக்கான விலையை அதனால் தெரிவு செய்ய முடியாது. இப் பண்பு நிறைப் போட்டிச் சந்தையின் அடிப்படைப் பண்பாகும். நிறை போட்டிச் சந்தை சில எடுகோள்களைக் கொண்டுள்ளது.

**(02 புள்ளிகள்)**

(அ) அதிக எண்ணிக்கையில் விற்பனையாளரும் நுகர்வோரும் இருப்பர்.

(ஆ) ஓரினத் தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

(இ) பூரண தகவல்கள் கிடைக்கும்.

(ஈ) பிரவேச வெளியேற்ற சுதந்திரம் நிலவும்.

இத்தகைய நிலையில் தனிப்பட்ட நிறுவனங்கள் விலைகளில் செல்வாக்குச் செலுத்த சக்தி கிடையாது. இதனால் ஒவ்வொரு நிறுவனமும் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலையை ஏற்று. தனது உற்பத்தித் தொகையை சீராக்குவதன் மூலம் அவ்வகையில் தனது இலாபத்தை உச்சப்படுத்த முடியும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv)(அ) மொத்த வருவாய் (TR) = விலை (P) x விற்பனைத் தொகை (Q) எல்லைவருவாய் (MR) =மொத்த வருவாயில் ஏற்பட் மாற்றம் $(\Delta TR) \div$ விற்பனைத் தொகையில் ஏற்படும் மாற்றம் $(\Delta Q)$

தரப்பட்ட விலை (P) ரூபா 200 கி.கிராம் ஒன்றிற்கு விற்பனைத் தொகை (Q) = 50 கி. கிராம்

மொத்த வருவாய் (TR) = 200 x 50

(TR) = ரூபா 10,000

**(01 புள்ளி)**

எல்லை வருவாய் (MR): சரத் வாரமொன்றில் 50 கி.கிராம் விற்பனை செய்கிறார் அத்துடன் மேலதிக கி.கிராம் ஒன்றை ரூபா 200 என்ற நிலையான விலையில் விற்பனை செய்கிறார் ஆகவே அவரது எல்லை வருவாய் (MR) = 200 ரூபாவாகும். ( P = MR )

**(01 புள்ளி)**

(ஆ) சரத் இலாபத்தை உச்சப்படுத்துகிறாரா என்பதை நிர்ணயிக்க எல்லை வருவாய் (MR) உடன் எல்லைச் செலவானது (MC) ஒப்பிட வேண்டும். நிறை போட்டியில் இலாப உச்சப்படுத்தல் MR = MC ஆகும் போது இடம் பெறும். இவ்வருமானத்தின் படி அவரது எல்லைச் செலவு கி.கிராம் ஒன்றிற்கு ரூபா 150 ஆகும். அவரது எல்லை வருவாய் கிகிராம் ஒன்றிற்கு 200 ரூபா ஆகும். ஆகவே சரத் அவரது இலாபத்தை உச்சப்படுத்தவில்லை.

**(01 புள்ளி)**

- இலாபத்தை உச்சப்படுத்த சரத் MC = MR ஆகும் வரையில் மேலதிகமாக கரட்டை சந்தைக்கு வழங்க வோண்டும். நிறைபோட்டிச் சந்தையில் இப்புள்ளியிலேயே MR வளையியும் MC வளையியும் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் MR MC விட அதிகமாகவுள்ளதால் அவை இரண்டில் சமமாகும் வகையில் சரத் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

**(01 புள்ளி)**

(இ) 30 கி.கிராம் வெளியீட்டு மட்டத்தில் சரத்தின் எல்லைச் செலவுகள் கி.கிராம் ஒன்றிற்கு 100 ரூபாவாகும். அவரது எல்லை வருவாயும் 100 ரூபாவாகும். MR = MC ஆவதால் சரத் இலாபத்தை உச்சப்படுத்துகிறார். (அல்லது நட்டத்தை இழிவுபடுத்துகிறார்)

**(01 புள்ளி)**

- பொருளின் இலாபம் (அல்லது நட்டம்) = மொத்தவருவாய் (TR) - மொத்தச் செலவு (T)

மொத்தவருவாய் (TR) = 100 x 30 = 3000 ரூபா

மொத்த செலவு (TC) = சராசரி மொத்தச் செலவு (ATC) xQ

ATC = சராசரி மாறுஞ் செலவு (AVC)+ சராசரி நிலையான செலவு (AFC)

= 80 + 40 = 120 ரூபா

மொத்தச் செலவு (TC) = 120 X 30 = 3600 ரூபா

**(01 புள்ளி)**

இப்போது நாம் இலாபத்தை அல்லது நட்டத்தைக் கணிப்பிடலாம்/ பொருளியல் இலாபம் (அல்லது நட்டம்)

= மொத்த வருவாய் (TR) – மொத்த செலவு (TC)

TR= 3000 - TC = 3600 = -600

பொருளியல் நட்டம் = 600 ரூபா

**(02 புள்ளி)**

- சரத் ஒரு பொருளியல் இலாபத்தை ஈட்டவில்லை அவர் 600 ரூபா மொத்த நட்டத்தை எதிர் கொள்கிறார் அதாவது ஒவ்வெரு கிலோ கிராமுக்கும் ரூபா 20 நட்டத்தை எதிர் கொள்கிறார்.

~~(01 புள்ளி)~~

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

5. (i) பின்வரும் நிகழ்வுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எவ்வாறு பாதிக்கும்? விளக்குக.

(அ) பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது சம்பளங்களில் ஒரு குறைப்பை ஏற்படுத்த வாக்களிக்கின்றனர்.

(ஆ) ஒரு வீட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் நோக்கில் ஒரு முதலீட்டாளர் ஒரு நிலத்துண்டினைக் கொள்வனவு செய்கின்றார்.

(இ) ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் தனது ஓய்வூதியக் கொடுப்பனவில் 2500 ரூபா அதிகரிப்பை பெறுகின்றார்.

(ஈ) நிறுவனங்கள் தமது கையிருப்புக்களை (inventories) அதிகரிக்கின்றன. (04 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படவேண்டிய முதன்மை வருமானத்தின் பிரதான மூலாதாரங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) அரசாங்கம் தனது மாற்றல் செலுத்தல்களை 100 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து அதேயளவினால் தன்னிச்சையான வரிகளையும் அதிகரிப்பதாகக் கொள்க. இம்மாற்றத்தினால் பொருளாதாரத்தின் மீது ஏற்படும் தேறிய விளைவு யாது? உமது விடையை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) ஒரு கருதுகோள் பொருளாதாரத்தின் பின்வரும் பேரினப் பொருளாதார மாதிரியைக் கருதுக.

| | | |
|---|---|---|
| நுகர்வு (C) | = | $420 + 0.8Y_D$ |
| மாற்றல் செலுத்தல்கள் (Tr.) | = | 200 |
| தன்னிச்சையான வரிகள் (T) | = | 250 |
| முதலீடு (I) | = | 160 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | = | 100 |
| தேறிய ஏற்றுமதிகள் (NX) | = | −40 |

(பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமான மட்டம் யாது? (04 புள்ளிகள்)

(ஆ) செலவிடத்தக்க தேசிய வருமானத்தையும் மொத்த சேமிப்பையும் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(இ) சமநிலை தேசிய வருமானம் 4000 பில்லியன் ரூபாவாக மாற்றமடைய வேண்டுமாயின் முதலீடு எந்தளவினால் மாற்றமடைய வேண்டும்? (04 புள்ளிகள்)

விளக்கம் இருந்தால் மட்டும் புள்ளி வழங்கவும்.

(i) (அ) இச்சம்பவம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒரு குறித்த காலப்பகுதியில் ஒரு நாட்டின் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளின் மொத்தப் பெறுமதியை அளவிடுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பளக் குறைப்பு அரசாங்க செலவீட்டில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு கூறாகும். அரசாங்க செலவீடுகள் குறைவடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிக்கு அது இட்டுச் செல்லும்.

**(01 புள்ளி)**

(ஆ) நிலத்தைக் கொள்வனவு செய்வது உடனடியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்காது ஏனெனில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமதியை அளவிடுகிறது. நிலக் கொள்வனவு ஒரு நிதிப் பரிமாற்றமாகும். அது ஒரு உற்பத்தி நடவடிக்கையன்று.

**(01 புள்ளி)**

(இ) இந்நிகழ்வு மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்காது. ஓய்வு பெற்ற ஒரு ஊழியர் ஓய்வூதிய அதிகரிப்பைப் பெறும் போது அது அரசாங்கத்திடம் இருந்து பெறப்படும் ஒரு மாற்றல் பெறுகையாகவே இருக்கும். மாற்றல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை. காரணம் அது ஒரு உற்பத்தி நடவடிக்கையல்ல.

**(01 புள்ளி)**

ஈ) நிறுவனங்களின் கையிருப்பில் ஏற்படும் அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நேர பங்களிப்பை வழங்கும்.

நிறுவனங்கள் தமது கையிருப்புக்களை அதிகரிக்கும் போது, தற்போது விற்கப்படும் பொருட்களை விடக் கூடுதலாக பொருட்களை உற்பத்தி செய்வதைக் குறிக்கும். இவ் உற்பத்தி நடவடிக்கை, உற்பத் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டு, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தி ஒரு பகுதியாக கணிப்பீட்டின் போது சேர்க்கப்படும். அது உற்பத்தி செய்யப்பட்டு இன்னும் விற்கப்பட பொருள் பெறுமதியை காட்டும் நிகழ்கால மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதுவும் ஒரு கூறாகும்.

**(01 புள்ள**

**மொத்தம் 04 புள்ளிக**

(ii) தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டின் எல்லைக்குள் உருவாக்கப்பட்ட மொத்த வருமானங்களி அளவீடு மொத்த உள்நாட்டு வருமானமாகும்.மொத்த உள்நாட்டு வருமானம் பல்வேறு முதல்நில வருமானங்களை உள்ளடக்கும் அவையாவன.

❖ வேதனங்களும். சம்பளங்களும்.
❖ இலாபங்கள்.
❖ முதலீட்டு வருமானங்களும் வட்டியும்.
❖ வாடகை வருமானங்கள்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்**

**மாற்றீட்டு விடை (I)**

உற்பத்தி செயல்முறையில் ஈடுபடுவதனால் அல்லது உற்பத்தி வளங்களை உரிமை கொண்டிருப்ப காரணமாக தாபன அலகுகளுக்கு கிடைக்கும் வருமானங்கள் முதன் நிலை வருமானங்கள் ஆ முதல் நிலை வருமானத்தின் கூறுகள் பின்வருவனவாகும்.

**ஊழியர்களுக்கான நட்ட ஈடு:**

உற்பத்தி செயல்முறையில் பயன்படுத்தப்படும் ஊழிய உள்ளீடுகளுக்காக கிடைக்கும் வருமானம் ஆகும்.

**(01 புள்ளி)**

**ஆதன வருமானங்கள்:** —① [illegible]

நிதிசார் அல்லது இயற்கை வளங்களை வாடகைக்கு விடுவதால் அல்லது கடன் வழங்குவ உழைக்கப்படும் வருமானங்களாகும். ஏனைய அலகுகளின் உற்பத்தியில் பயன்பாட்டிற்காக வாடகை வழங்கப்படும்

நிலம்
வட்டி வருமானம்
இலாபம்
வாடகை.

**(02 புள்ளிக**

**உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான மானியங்கள் நீங்கலான வரிகள்:**

அரசாங்கத்தின் முதல்நிலை வருமானம்

**(01 புள்**

**மொத்தம் 04 புள்ளி**

மாற்றீட்டு விடை II

ஊழியர்களுக்கான நட்ட ஈடு

மொத்த செயற்பாட்டு மிகை

மொத்த கலப்பு வருமானங்கள்.

உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான மானியங்கள் நீங்கலான வரிகள் (N.T).

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) அரசாங்கம் மாற்றல் கொடுப்பனவுகளை 100 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து அதேயளவு வரியாக அறவிட்டால் பொருளாதாரத்தில் அதன் தேறிய விளைவு நடுநிலையானதாகும். வருமானம், மொத்தக் கேள்வி என்பவற்றின் மீது அது தேறிய மாற்றங்களை ஏற்படுத்தாது.

இது பெரும்பாலும் இறைச் சலவை அல்லது இறை நடுநிலைத்தன்மை என அழைக்கப்படும்.

**(01 புள்ளி)**

அரசாங்கம் மாற்றல் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் போது அவற்றைப் பெறுவோரின் செலவிடத்தக்க வருமானம் 100 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் அதேவேளை அரசாங்கம் அதே அளவினால் வரிகளை அதிகரிப்பதால் இது வரி செலுத்துபவர்களின் செலவிடத்தக்க வருமானத்தை 100 பில்லியன் ரூபாவினால் குறைவடையச் செய்யும். இதனால் மாற்றல் கொடுப்பனவுகளால் செலவிடத்தக்க வருவாயில் ஏற்படும் அதிகரிப்பு வரி அதிகரிப்பினால் ஏற்படும் செலவிடத்தக்க வருமான வீழ்ச்சியினால் ஈடு செய்யப்பட்டு விடும்.

**(01 புள்ளி)**

**மொத்தம் 02 புள்ளிகள்**

(iv) (அ)

$Y = C + I + G + NX$

$Y = 420 + 0.8Y_D + 160 + 100 + (-40)$ **(01 புள்ளி)**

$Y = 420 + 0.8(Y + Tr. - T) + 260 - 40$

$Y = 420 + 0.8(Y + 200 - 250) + 260 - 40$ **(01 புள்ளி)**

$Y = 420 + 0.8Y + 160 - 200 + 220$

$Y = 420 + 0.8Y + 180$

$Y = 600 + 0.8Y$ **(01 புள்ளி)**

$0.2Y = 600$ $Y = 3000$ Rs. 3000 பில்லியன் **(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ஆ) செலவிடத்தக்க தேசிய வருமானம் $(Y_d)$ = மொத்தத் தேசிய வருமானம் + வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல் - வெளிநாடுகளுக்கு செலுத்திய நேர் வரிகள் (வருமானம், செல்வரி)

- வெளிநாடுகளிருந்தான தேறிய மாற்றல் பெறுகைகள் = 0
- வெளிநாடுகளுக்கு செலுத்திய நேர் வரிகள் = 0
- செலவிடத்தக்க தேசிய வருமானம் $(Y_d)$ = 3000 + 0 + 0 = 3000 பில்லியன்

**(01 புள்ளி)**

Yd = Y − T + TR

= 2950

- மொத்த சேமிப்புக்கள் ஸ்ரீ தனியார் சேமிப்புக்கள்; (S) அரசாங்க சேமிப்புக்கள்; (S)
- தனியார் சேமிப்புக்கள்; (S) = Yd - (420 - 0.8Yd)
- செலவிடத்தக்க தனியார் வருமானம் ஸ்ரீ Y + மாற்றல் செலுத்தல்கள் - தன்னிச்சையான வரிகள் = 3000 + 200 - 250 = 2950
- தனியார் சேமிப்புக்கள் $(S_p) = 2950 - [420 + 0.8 (2950)]$
  $= 2950 - 2780 = 170$
- அரசாங்க சேமிப்புக்கள் $(S_p)$ = தேறிய வரிகள் (NT) - அரசாங்க கொள்வனவுகள் (a)
- அரசாங்க சேமிப்புக்கள் $(S_p) = (250 - 200)-100 = -50$
- மொத்த சேமிப்புக்கள் $= S_p + S_g = 170 + (-50)$
  =120 பில்லியன்

(01 புள்ளி)

**மாற்றீடான விடை (1) :**

- மொத்த சேமிப்புக்கள்(S) = செலவிடத்தக்க தேசிய வருமானம் (Yd)- இறுதி நுகர்வு
- இறுதி நுகர்வு = தனியார் நுகர்வு + அரசாங்க நுகர்வு
- இறுதி நுகர்வு = 2780 + 100 = 2880
- மொத்த சேமிப்பு (S) = 3000 - 2880 = 120 மில்லியன்

(01 புள்ளி)

**மாற்றீடான விடை (2) :**

- மொத்த சேமிப்புக்கள் (S) = மொத்த உள்நாட்டு மூலதான ஆக்கம் (1)+ தேசிய ஏற்றுமதிகள் (NX)
- மொத்த சேமிப்புக்கள் (S) = 160 + (-40) = 120 பில்லியன்

(01 புள்ளி)

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(இ) 4000 பில்லியன் ரூபா சமநிலையை அடைவதற்கு முதலீடு (1) எந்த நிலையினால் மாற்றமடைய வேண்டும் என்பதைக் காண முதலீட்டுப் பெருக்கி மாதிரியைப் பயன்படுத்தலாம். ஏற்கனவே சமநிலை தேசிய வருமானம் Y= 3000 பில்லியன் என அளவிடப்பட்டுள்ளது.

4000 பில்லியன் ரூபா சமநிலை வருமானத்தை அடைய சமநிலை வருமானம் 4000 - 3000 = 1000 பில்லியன் ரூபாவினால் மாற்றமடைய வேண்டும்.

(01 புள்ளி)

முதலீட்டுப் பெருக்கி (k) $= \frac{1}{MPS} = \frac{1}{1-MPC} \quad \frac{1}{1-0.8} \quad \frac{1}{0.2} \quad 5$:

(01 புள்ளி)

1000 பில்லியன் ரூபா வருமான மாற்றத்தை ஏற்படுத்த தேவையான முதலீடு (I) மாற்றம் $=\Delta I= \frac{1000}{5}$ 200 200 பில்லியன் ரூபாவினால் முதலீடு அதிகரிக்க வேண்டும்.

(02 புள்ளிகள்)

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியையும் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பணவீக்கத்தின் செலவுகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) (அ) 'உயர்வலுப் பணம்' என்பதனால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) பொருளாதாரத்தின் உயர்வலுப் பண இருப்பை நிர்ணயிக்கும் இரு காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) ஒரு வணிக வங்கியின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு தரப்படுகின்றது.

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| கேள்வி வைப்புகள் | 2000 | ஒதுக்குகள் | 500 |
| மூலதனம் | 1300 | கடன்கள் | 1600 |
| | | கட்டடங்கள் | 1200 |
| மொத்தம் | 3300 | மொத்தம் | 3300 |

(இலக்கங்கள் மில்லியன் ரூபாவில்)

தேவைப்பாடுடைய ஒதுக்கு வீதம் 10% ஆயின், இவ்வங்கியின் மிகை ஒதுக்குகளின் அளவு யாது? (02 புள்ளிகள்)

(v) சுருக்கப் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி பயன்படுத்தவல்ல மூன்று பிரதான கருவிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

நு.வி.சு மதிப்பீட்டில் பொருட்களோடு. ஆனால் மொ.உ.உ.சுருக்கி மொ.உ.உயின் (ஏற்ற) பின் பல விளைவாகும்.

(i) - மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது ஒரு பொருளாதாரத்தினுள் உற்பத்தி செய்யப்படும் எல்லாப்பொருள்கள் சேவைகளினதும் பொதுவிலை மட்டத்தை அளவிடுகிறது. அது வீட்டுத்துறை வியாபாரத்துறை மற்றும் அரசாங்கம் நுகர்வுசெய்யும் பொருள்கள் சேவைகளினதும் முதலீடு மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் சேவைகளினதும் விலைமட்ட மாற்றங்களை அது பிரதிபலிக்கிறது.

- நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது வீட்டுத்துறையினர் வழக்கமாகக் கொள்வனவு செய்யும் நிலையான ஒருகூடை பொருள்கள் சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவீடு செய்யும். அது வீட்டுத்துறையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மாதிரியினர் கொள்வனவு செய்யும் பொருள்கள் சேவைகள் மீது கவனம் செலுத்துவதுடன் நுகர்வோரின் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களை அளவிட முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

- மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது ஒரு பொருளாதாரத்தினுள் உற்பத்திசெய்யப்படும் எல்லாப்பொருள்கள் சேவைகளையும் உள்ளடக்குகிறது.. மறுபுறம் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சேவைகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களையும் உள்ளடக்குகிறது.

- நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது வேறுபட்ட பொருள்களின் விலைகளுக்கு நிலையான நிறையிடலை மேற்கொள்ளும் அதேவேளை மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது மாற்றமடையும் நிறையிடலை மேற்கொள்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது ஒரு நிலையான கூடையில் உள்ள பொருள்கள் சேவைகளின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது காலப்போக்கில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப பொருள்கள் மாற்றமடைய அனுமதிக்கிறது.

நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பீட்டில் ஒரு நிலையான கூடையில் உள்ள பொருள்கள் நிலையானதாகும் அத்துடன் அதற்கு வெளியில் உள்ள பொருள்களின் விலைமாற்றங்களை சிலவேளை அது தவறவிடலாம். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது ஒரு கூடைப்பொருள்கள் சேவைகளின் அடிப்படையில் கணிப்பிடாதபடியினால் அது நுகர்வு நடத்தையில் ஏற்படும் மாற்றங்களையும் புதியபொருள்களின் அறிமுகங்களையும் தானாகவே உள்ளடக்குகிறது. இதனால் அது பொருளாதாரம் எங்குள்ளது என்பது பற்றிய குறிகாட்டியாக நுகர்வோர் விலைச்சுட்டெண்னை விட சிறப்பானதாகும்.

**(ஒரு வித்தியாசத்தற்கு 02 புள்ளி எவையேனும் இரண்டு வேறுபாடுகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) **பணவீக்கத்தின் செலவுகள்:**

- பணவீக்கம் பணத்தின் கொள்வனவுச் சக்தியை அரித்துவிடுகிறது. விலைகள் அதிகரிக்க தரப்பட்டளவு பணம் சிறியளவு பொருள்கள் சேவைகளையே கொள்வனவு செய்யக் கூடும். இதனால் நுகர்வோர் தமது வாழ்கைத் தரத்தைப்பேண அதிகளவு செலவு செய்ய நேரிடும். குறிப்பாக நிலையான வருமானத்தில் வாழும் மக்களை அது காயப்படுத்தும்.

- உயர்ந்தளவு அல்லது தளம்புகின்ற நிலைப் பணவீக்கம் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மையினை உருவாக்கும். வியாபாரங்கள் எதிர்காலத்தைத் திட்டமிட போராடவேண்டியேற்படலாம். ஏனெனில் எதிர்காலத்தில் பணத்தின் பெறுமதி செலவுகள் மற்றும் விலைகள் பற்றி நிச்சயமற்றிருப்பர். இது முதலீட்டு வீழ்ச்சிக்கும் பொருளாதார உறுதியற்ற நிலைக்கும் இட்டுச் செல்லலாம்

- உயர் பணவீக்கத்துடன் போராட மத்தியவங்கி வட்டிவீதங்களை உயர்த்தலாம். உயர் வட்டிவீதங்கள் கடன்பெறலை செலவு மிக்கதாக மாற்றும். அதனால் நுகர்வோர் செலவீடுகளும் வியாபார முதலீடுகளும் குறைவடையும். அத்துடன் அது வட்டிவீதங்களுடன் உணர்திறன் மிக்க வீடமைப்பு மற்றும் கட்டடவாக்க போன்ற கைத்தொழில்களில் எதிர்க்கணிய ரீதியில் தாக்கம் செலுத்தும்.

- பணவீக்கமானது பொருளாதாரத்தில் விலைச் சமிக்ஞைகளை பிறழ்வு படுத்தலாம். பணவீக்க காரணமாக விலைகள் அதிகரிக்கும் போது கேள்வி நிரம்பல் மாற்றம் காரணமாக ஏற்படும் விலைமாற்றங்களையும் பணவீக்கம் காரணமாக ஏற்படும் விலைமாற்றங்களையும் வேறுபடுத்தியறிவது சவால் மிக்கதாகும். இது உத்தமமற்ற பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்வதற்கு இட்டுச் செல்லும்.

- பணவீக்கத்துடன் இயைந்து விலைகளைச் சீராக்கம் செய்ய நிறுவனங்கள் செலவுகளை எதிர்கொள்ளலாம். இது அடிக்கடி நடக்கலாம். விலைப்பட்டியல்களை அடிக்கடி மாற்ற நேரிடும் மென்பொருள்களை இற்றைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் உபாயங்களை மாற்றியமைத்தல் என்பன இதிலடங்கும்.

- பணவீக்கமானது சமூகத்தினுள் வருமானத்தையும் செல்வத்தையும் மீள்பங்கீடு செய்யலாம் கடன் பெற்றவர்கள் பணவீக்கத்தினால் நன்மையடைவர் ஏனெனில் அவர்கள் பெற்ற கடன்களை குறைந்த கொள்வனவுலு சக்திமிக்க பணத்தைக்கொண்டே மீளச் செலுத்துவர். மறுபுறம் கடன் கொடுத்தவர்கள் இழப்பினைச் சந்திக்கலாம் ஏனெனில் அவர்கள் வழங்கிய கடன்களின் மெய்ப்பெறுமதி குறைவடையும்
- பணவீக்கமானது ஒரு நாட்டின் சர்வதேச போட்டித்தன்மையை இல்லாமற் செய்யலாம். பணவீக்க காரணமாக ஒருநாட்டின் நாணயம் தேய்வடையும் போது அதன் ஏற்றுமதிகள் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு மலிவானதாக மாறுவதுடன் இறக்குமதிகள் விலை கூடியதாக மாறும்.

இது வர்த்தக சமமின்மைகளை உருவாக்குவதுடன் சர்வதேச வர்த்தகத்தில் தங்கியுள்ள கைத்தொழில்களைப் பாதிக்கும்.

- பணவீக்கமானது சேமிப்புகளையும் நீண்டகால முதலீடுகளையும் ஊக்குவிக்காது. சேமிப்புக்களின் மெய் வருவாய் (பணவீக்கத்திற்கு சீராக்கப்பட்ட) குறைவாகவோ எதிர்க்கணியமாகவோ இருப்பின் தனிநபர்களும் நிறுவனங்களும் சேமிப்புகளை மேற்கொள்ளவோ அல்லது உற்பத்தியை ஈட்டும் சொத்துக்களில் முதலீடு செய்யவோ அக்கறைப்பட மாட்டார்கள்.

- மிகவும் உயர்ந்த அல்லது மீயுயர் பணவீக்கம் சமூக அரசியல் அமைதியின்மைக்கு இட்டுச் செல்லலாம். அது நாட்டின் நாணயம் மற்றும் நிதிநிறுவனங்கள் மீதான நம்பிக்கையை சிதைத்துவிடுவதுடன் பொருள்களின் பதுக்கல் பண்டமாற்று முறை என்பவற்றை ஊக்குவிப்பதுடன் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படவும் ஏதுவாகும்.

**(ஒரு செலவிற்கு 01 புள்ளி எவையேனும் நான்கு செலவுகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) - அ) ஒதுக்கு அல்லது அடித்தளப்பணம் எனவும் அழைக்கப்படும் உயர்வலுப்பணம் என்பது பெரியளவிலான நாணய கூட்டுக்களின் இருப்புகள் உருவாவதற்கு ஏதுவாகும் நாணய அடித்தளமாகும். ஒரு தேசத்தின் பணநிரம்பலைத் தீர்மானிக்கும் முக்கிய நிர்ணயிப்பான்களில் அதுவும் ஒன்றாகும்.

**(01 புள்ளி)**

- உயர்வலுப்பணமானது (அ) பொதுமக்களிடமும் வணிகவங்கிகளிடமும் உள்ள பணம் (ஆ) வணிக வங்கிகள்மத்திய வங்கியில்பேணும்வைப்புகள்ஆகியவற்றைஉள்ளடக்கும். உயர்வலுப்பணத்திற்கான (H) சூத்திரம் பின்வருமாறு:

$H = C$ (நாணயம்) + R (வங்கி முறைமையிலுள்ள வைப்புகள்)

**(01 புள்ளி)**

ஆ) **பொருளாதாரத்தில் உயர்வலுப்பணத்தின் கையிருப்பைத் தீர்மானிக்கும் காரணிகள் :**

- உயர் வலுப்பணமானது மத்தியவங்கியிடமிருந்து பொருளாதாரத்தில் விடுவிக்கப்படும் இரண்டு வழி-முறைகள் உண்டு. முதலாவது அரசாங்கத்திற்கும் வணிக வங்கிகளுக்கும் கடன்வழங்குவதன் மூலம் உள்நாட்டுச் சொத்துகளைக் கையகப்படுத்தல் மூலம்

- மற்றைய வழிமுறையானது மத்தியவங்கியானது அரசாங்கத்திடமிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தலாகும்

- **மத்திய வங்கியின் கொள்கை:** மத்தியவங்கியானது நாணய அடித்தளத்தின் மீத நேரடிக்கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. கழிவீட்டுவீதங்களை மாற்றியமைத்தல் ஒதுக்கீட்டுத் தேவைப்பாடுகளை மாற்றியமைத்தல் திறந்த சந்தை நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக மத்திய வங்கியானது பணநிரம்பலில் செல்வாக்குச் செலுத்தலாம். உதாரணமாக மத்தியவங்கியானது திறந்த சந்தையில் அரச முறிகளை விற்கவோ வாங்கவோ முடியும். இது வணிகவங்கிகளில் உள்ள ஒதுக்குகளைப் பாதிப்பதனால் நாணய அடித்தளத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

- **நாணயத்திற்கான கேள்வி:** புழக்கச் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அளவானது (ஊ) பொதுமக்கள் பரிமாற்ற ஊடகமாக பணத்தை எந்தளவு வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதில் தங்கியுள்ளது. பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் நுகர்வோரின் உணர்வுகள் மற்றும் செலுத்தல்களை மேற்கொள்ளும் பழக்கவழக்கம் போன்ற காரணிகள் பௌதீக ரீதியிலான பணத்திற்கான ;கேள்வியை பாதிக்கலாம்.

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி இரண்டு விடயங்களுக்கு 02 புள்ளிகள்)**
**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) - வங்கியின் மிகை ஒதுக்குகளைக் கணிப்பிடுவதற்கு முதலில் தேவையான ஒதுக்குகளின் அளவை நிர்ணயிக்க வேண்டும் பின்னர் உண்மையான ஒதுக்குகளின் அளவிலிருந்து அதனை கழிக்கவேண்டும்.

- தரப்பட்ட கேள்வி வைப்புகள் = ரூபா. 2000 பில்லியன்
- தேவையான ஒதுக்கு விகிதம் = 10%
- தேவையான ஒதுக்குகள் = கேள்வி வைப்புகள் × ஒதுக்குத் தேவை விகிதம்
- தேவையான ஒதுக்குகள் = ரூபா. 2000 பில்.லியன் x 10% = Rs. 200 பில்லியன்
- உண்மையான ஒதுக்குகள் = ரூபா. 500 பில்லியன்
- மிகை ஒதுக்குகள் = உண்மையான ஒதுக்குகள் - தேவையான ஒதுக்குகள்:
- மிகை ஒதுக்குகள் = ரூபா. 500 பில்லியன - ரூபா. 200 பில்லியன = ரூபா. 300 பில்லியன்

**(02 புள்ளிக**

(v) - மத்திய வங்கியானது சுருக்கப்பணக்கொள்கையைக் கையாள சில கருவிகளைப் பயன்படுத்தல அவை பணவீக்கத்தை கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தைக் குளிர்வடையவைக்கவும் பணநிரம்பலை குறைப்பதை நோக்காகக் கொண்டுள்ளன

- **கொள்கை வட்டிவீதங்களை அதிகரித்தல்:** இந்த முக்கிய வட்டிவீதத்தை அதிகரிப்பதன் மூ மத்தியவங்கியானது நுகர்வோருக்கும் வங்கிகளுக்கும் கடன் பெறுதலை செலவு கூடிய ஒன் மாற்றுகிறது. இதனால் நுகர்வோரின் செலவீட்டைக் குறைப்பதுடன் வியாபார முதலீடுகளை வீழ்ச்சியடையச் செய்யும். முக்கள் குறைந்தளவு கடன் பெறுவதானது பணநிரம்பலை வீழ்ச்சியடை செய்யும்.

**(02 புள்ளிக**

- **திறந்த சந்தை நடவடிக்கைகள் :** திறந்த சந்தையில் அரச முறிகளை விற்பனை செய் மூலம் மத்தியவங்கியானது திறந்தசந்தை நடவடிக்கையை மேற்கொள்ளலாம். மத்தியவங்கியா அரச பிணையங்களை வணிக வங்கிகளுக்கும் ஏனைய நிதிநிறுவனங்களுக்கும் விற்கும்போது வங்கிமுறைமையிலிருந்து பணத்தை உள்ளீர்த்துக்கொள்கிறது. இதன் விளைவாக வங்கிக கடன்வழங்க குறைந்தளவு பணமே இருக்கும். இது பொருளாதாரத்தின் முழுமையான பணநிரம் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

**(02 புள்ளி**

- **நியதி ஒதுக்குத் வீகிதத்தை அதிகரித்தல்:** ஒதுக்குத் தேவை அதிகரிக்கும் போது வங் அதிகளவு பணத்தை தம்மிடம் வைத்திருக்க வேண்டும். இதனால் நுகர்வோருக்கும் வியாபாரங்களு கடன்வழங்கும் வங்கிகளின் ஆற்றல் குறையும்.

**(02 புள்ளி**
**(மொத்தப் புள்ளிகள்**

7. (i) வள ஒதுக்கீட்டில் வெளிவாரி நன்மைகளினதும் வெளிவாரி செலவுகளினதும் விளைவுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) மேன்மைப் பொருட்களுக்கு இரு உதாரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கத்தின் தலையீடு இல்லாத சந்தர்ப்பங்களில் மேன்மைப் பொருள்கள் ஏன் பெரும்பாலும் குறை நுகர்வுக்கு உட்படுகின்றன என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) 'வரியின் மிகைச்சுமை' என்பதால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)

(iv) இலங்கையில் அரசாங்க வருவாயின் குறைந்துசெல்லும் போக்கினை மீள்திருப்ப அரசாங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) ஒரு நாட்டின் பொதுப்படுகடனின் நிலைபேற்றுத் தன்மையை நிர்ணயிப்பதில் ஆரம்பக் கணக்கு மீதி மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்? (06 புள்ளிகள்)

(i) - **வெளிவாரி நன்மைகள் (நேர்க்கணிய வெளிவாரிகள்):** ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்தி அல்லது நுகர்வானது அப்பரிமாற்றத்தில் நேரடியாகப் பங்குபற்றாத மூன்றாம் தரப்பினருக்கு நன்மைகளைப் பிறப்பிக்கும் போது வெளிவாரி நன்மைகள் உருவாகின்றன.

- **குறை உற்பத்தி :** நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவும் போது சமூக ரீதியில் உத்தமமான மட்டத்தை விட குறைவாக நன்மைகளை வழங்கும் குறைந்தளவு பொருள்கள் சேவைகளையே சந்தையானது உற்பத்தி செய்யும். ஏனெனில் உற்பத்தியாளர்கள் தமது விலையிடல் தீர்மானங்களில் எல்லா சமூக நன்மைகளையும் கருத்தில் கொள்வதில்லை இதனால் இத்தகைய நடவடிக்கைகளுக்கு குறைந்தளவு வளஒதுக்கீடே இடம்பெறும்.

**(02 புள்ளிகள்)**

- **வெளிவாரிச் செலவுகள் (எதிர்க்கணிய வெளிவாரிகள்)** ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்தி அல்லது நுகர்வு மூன்றாம் தரப்பினர் மீது செலவுகளை ஏற்படுத்தும் அதேவேளை அவற்றிற்கு நட்டஈடு வழங்காத நிலையில் உருவாகின்றன.

- **மிகையுற்பத்தி :** எதிர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது சந்தையானது பொருள்கள் சேவைகளை அதிகளவில் உற்பத்தி செய்து சமூகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவை விடக் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்த விழையும் இவ்வாறு நடப்பது ஏனெனில் உற்பத்தியாளர்கள் தமது விலையிடல் தீர்மானங்களில் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளாமையாகும். இதனால் வளங்கள் வினைத்திறனற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு தீங்கு விளைக்கும் நடவடிக்கைகளுக்கு வளங்கள் மிகை ஒதுக்கீடு செய்யப்பட ஏதுவாகும்.

**(02 புள்ளிகள்))**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) (அ) மேன்மைப் பொருள்களுக்கு உதாரணங்கள்:

- கல்வி
  தடுப்பூசியேற்றல்
  சுகாதாரப்பராமரிப்பு
  ஆரோக்கிய உணவுண்ணல்

- கலையும்
  கலாசாரமும்
  சுற்றாடல் பாதுகாப்பு
  நூலகங்கள்

- பொதுப் போக்குவரத்து அருங்காட்சியகம்
  மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவளம்
  தகவல்கள் பாதுகாப்பு உபகரணங்கள் விளையாட்டும பொழுது போக்கும்

**(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் இரண்டு உதாரணங்களுக்கு 02 புள்ளிகள்)**

(ஆ) - மேன்மைப்பொருள்கள் என்பவை நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்குபவையாகும். அவற்றின் நுகர்வானது நுகரும் நபருக்கு மாத்திரமின்றி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் மேலதிக நன்மைகளை உருவாக்கும். அரசாங்கத் தலையீடு இல்லாத பட்சத்தில் பெரும்பாலும் குறைநுகர்வுக்கு உட்படும் ஏனெனில் நுகர்வோர் தமது நுகர்வுத் தெரிவுகளை மேற்கொள்ளும்போது முழுமையான சமூ நன்மைகளைக் கருத்திற் கொள்வதில்லை. தனியார் சந்தைகள் இத்தகைய பொருள்களின் உத்தம அளவினை உற்பத்தி செய்வதோ நுகர்வதோ கிடையாது.

- நுகர்வோர்கள் மேன்மைப்பொருள்களின் நேர்க்கணிய வெளிவாரிகள் பற்றிய முழுமையானதும் சரியா னதுமான தகவல்களைக் கொண்டிருப்பதில்லை. இதன் விளைவாக உண்மையான நன்மைகளை குறைத்து மதிப்பீடு செய்வர் அதனால் அவை குறைநுகர்வுக்கு உட்படும்.

- **நீண்டகால நன்மைகள் :** மேன்மைப்பொருள்கள் பெரும்பாலும் முன்னேற்றமடைந்த சுகாதா வசதிகள் கல்வி அல்லது சூழலியல் பேண்தகுதன்மை போன்ற நீண்டகால நன்மைகளை பெரும்பாலு வழங்கும். தனிநபர்கள் தமது குறுங்கால நன்மைகளை முன்னுரிமைப்படுத்தி நீண்டகால நன்மைகளை கழிவீடு செய்வர். இதனால் இவை குறைநுகர்வுக்கு உட்படும்

**(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி வீதம் இரு காரணங்களுக்கு 02 புள்ளிகள்**

(iii) - வரியின் மிகைச் சுமை அல்லது மீளமுடியாத இழப்பு என்பது வரிகள் விதிக்கப்படும் போது வளங்க தவறாக ஒதுக்கீடு செய்யப்படுவதனால் ஏற்படும் பொருளாதார வினைத்திறனின்மையை குறிக்கும். இ வரியின் மிகைச் சுமை என அழைக்கப்படக் காரணம். வரியினால் ஏற்படும் நிதிரீதியிலான சுமைக் மேலதிகமான ஒரு சுமையாக இருப்பதனாலாகும்.

**(01 புள்**

- வரிகள் ஊக்குவிப்புகளை பிறழ்வுகளுக்கு உள்ளாக்குவதுடன் நுகர்வோரினதும் வியாபாரங்களினத நடத்தைகளை மாற்றியமைப்பதனால் பொருளாதார நன்மையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியினை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தனிநபர்களும் வியாபாரங்களும் தமது வரிப் பொறுப்புகளை இழிவுபடுத்தும் வகையில் தமது தீர்மானங்களை எடுப்பதனால் வரிகள் வளங்களின் பிழையா ஒதுக்கீட்டிற்கு இட்டுச் செல்லலாம்.

**(01 புள்**

**(மொத்தம் 02 புள்ளிகள்**

(iv) - 2022 ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற்கமைய அரசாங்கம் கடந்தகாலத்திற்கும் பொருந்தக் கூடியவகையில் 2020-2021 வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூபா 2 பில்லியன் வரிக்குட்பட்ட வருமானத்தை உடைய தனிநபர்கள் கம்பனிகள் மற்றும் பங்குடமைகள் மீது ஒரு முறை செலுத்தவேண்டிய 25 சதவீத வரியை விதித்தது.

- நிதிச் சேவைகள் மீது விதிக்கப்பட்டிருந்த 15சதவீத வற் வரியினை 2022 ஜனவரி மாதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்தது. .

- மே மாதத்திலிருந்து வற் வரி வீதத்தை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும் பின்னர் 2022 செப்டெம்பர் மாதம் 15 சதவீதமாகவும் அதிகரித்ததுடன் வற் பதிவு செய்வதற்கான ஆரம்ப எல்லையை 2022 ஒக்டோபர் 01 இலிருந்து ரூபா 300 மில்லியனிலிருந்து 80 மில்லியனாகக் குறைக்கப்பட்டது இதன் மூலம் வரி அடிப்படை விரிவாக்கப்பட்டது

- 2022 ஒக்டோபர் 01 இலிருந்து வருடாந்தம் 120 மில்லியன் ரூபாவுக்கு மேல் புரள்வினைக்கொண்ட இறக்குமதியாளர்கள் கைத்தொழில் உற்பத்தியாளர்கள் சேவை வழங்குநர்கள் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மீது 2.5 சதவீத சமூக பாதுகாப்பு வரி சுமத்தப்பட்டது

- 2022 டிசெம்பரில் தனியாள் மற்றும் கம்பனிகள் மீதான வருமானவரிக் கட்டமைப்பு திருத்தப்பட்டது. தனியாள் வருமானவரிவிதிப்புக்கான வருமான எல்லை வருடாந்த வருமானம் ரூபா 3 மில்லியனிலிருந்து 1.2 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. செலவு நிவாரணமாக கல்வி சுகாதாரம் வீட்டுக்கடன் மீதான வட்டி ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு என்பவற்றிற்காக வழங்கப்பட்டிருந்த நிவாரணம் நீக்கப்பட்டது.

- தனியாள் வருமான வரிகள் முன்னர் இருந்த 6 சதவீதம் 12 சதவீதம் 18சதவீதம் என்பவற்றிலிருந்து 6 சதவீதம் 12 சதவீதம் 18சதவீதம் 24 சதவீதம் 30 சதவீதம் 36 சதவீதம் ஆக அதிகரிக்கப்பட்டதுடன் 1.2 மில்லியன் ரூபா வரிவிடுதலையளிக்கப்பட்ட வருமானத்திற்கு மேல் வரித் தொகுதிகள் 0.5 மில்லியனாக திருத்தியமைக்கப்பட்டன.

- 2023 ஜனவரியிருந்து கட்டாய பிடித்துவைத்தல் வரி அறிமுகம் செய்யப்பட்டது.

- கம்பனி வருமான வரிவீதங்கள் 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதுடன் துறைகளை அடிப்படையாகக் கொண்ட வரிவிடுதலைகளும் சலுகை அடிப்படையில் கம்பனிகளுக்கு வரிவீதங்களும் நீக்கப்பட்டன.

**(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(ஆண்டொன் புள்ளி வீதமான் அறிமுகம் புள்ளி வழங்கவும்.)

(v) ஒரு நாட்டின் பொதுப்படுகடனின் நிலைபேற்றுத்தன்மையை நிர்ணயிப்பதில் முதலாந்தரக்கணக்கு நிலுவையின் முக்கியத்துவம் .

- ஒரு நாட்டின் கடன் நிலைபேற்றுத் தன்மையை மதிப்பிடுவதில் முதலாந்தரக்கணக்கு நிலுவை ஒரு முக்கிய குறிகாட்டியாகும். இது ஒரு அரசாங்கத்தின் இறைத்துறையின் ஆரோக்கியத்தையும் கடன்கள் குவியாமல் பெற்ற கடன்களை சேவைப்படுத்தும் ஆற்றலையும் அளவிடுகிறது.

- **கடன் சேவை செய்யும் இயலுமை:** ஒரு அரசாங்கம் தனது நிகழ்கால வருவாய்களைக் கொண்டு அதன் நடைமுறைச் செலவினங்களை (வட்டிச் செலுத்தல்கள் தவிர்ந்து) ஈடுசெய்யக் கூடிய ஆற்றலை முதலாந்தரக்கணக்கு நிலுவையானது பிரதிபலிக்கிறது. முதலாந்தரக்கணக்கு நிலுவை நேர்க்கணியமாயின் மேலும் கடன் பெறாமல் வட்டிச் செலுத்தல்கள் தவிர்ந்த செலவுகளை ஈடுசெய்ய முடியும் என்பதைப் குறித்துக்காட்டும். இதன் கருத்து மேலதிக கடனில் தங்கியிருக்காமல் அரசாங்கத்திற்கு பொதுச் சேவைகள் உட்கட்டுமானங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கான அதிக இறை இடைவெளி இருப்பதைக் குறிக்கும்

- **கடன் சுமையைக் குறைத்தல் :** ஒரு நேர்க்கணியமான முதலாந்தரக் கணக்கு நிலுவையானது ஏற்கெனவே உள்ள கடன் சுமையைக் குறைக்கவும் பயன்படுத்தப்படலாம். அரசாங்கம் முதலாந்தரக்கணக்கில் மிகைநிலையை ஏற்படுத்துமாயின் அந்த நிதிகளை ஏற்கெனவே உள்ள கடன்களை மீளச் செலுத்த ஒதுக்கலாம். இதனால் காலப்போக்கில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக கடனினளவு குறைவடையும். குறைவான கடன் – மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கடன் நிலைபேற்றுத் தன்மைக்கான முக்கிய குறிகாட்டியாகும்.

- **கடன்பெறலில் தங்கியிருப்பதைக் குறைத்தல்:** ஒரு நேர்க்கணியமான முதலாந்தரக்கணக்கு நிலுவையானது நடைமுறைச் செலவினங்களை ஈடுசெய்ய ஒரு அரசாங்கம் கடனில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைக்கும். அரசாங்கங்கள் தொடர்ச்சியாக முதலாந்தரக் கணக்கில் குறைநிலையைக் கொண்டிருக்குமாயின் அவை தமது கடப்பாடுகளுக்காக மேலும் கூடுதலாகக் கடன்பெறவேண்டியிருப்பதுடன் கடன்கள் திரட்சியடையவும் இட்டுச் செல்லும். காலப்போக்கில் கடன்மட்டம் அதிகரிப்பதனால் இந்நிலைமை நீடிக்க முடியாததாக மாறும்.

- **கடன் பெறும் தகுதி:** ஒரு நாட்டின் கடன் பெறும் தகுதியைப் பேணிச் செல்ல காத்திரமான ஒரு முதலாந்தரக்கணக்கு நிலுவையைப் பேணுவது அவசியமாகும். கடன் வழங்குநர்களும் கடன் தரமிடல் முகவர்களும் ஒரு அரசாங்கம் முதலாந்தரக்கணக்கில் ஒரு மிகைநிலையை உருவாக்கும் ஆற்றலை நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருப்பர். ஏனெனில் ஏற்கெனவே பெற்ற கடன்கள் மீதான வட்டிச் செலுத்தல்கள் உள்ளடங்கலாக அரசாங்கம் அதன் நிதிசார் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதை குறித்துக்காட்டும். வலுவான ஒரு முதலாந்தரக்கணக்கு நிலுவை அரசாங்கத்தின் சிறந்த கடன் தரமிடலுக்கும் குறைந்த கடன் பெறல் செலவுகளுக்கும் இட்டுச் செல்லும்

**(ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் எவையேனும் 03 காரணிகளுக்கு மொத்தம் 06 புள்ளிகள்)**

8. (i) வெளிநாட்டு வர்த்தகத்தில் 'முழு நன்மை' மற்றும் 'ஒப்பீட்டு நன்மை' ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) சர்வதேச வர்த்தகத்தில் பாதுகாப்பு வாதத்திற்கு ஆதரவானதும் எதிரானதுமான இவ்விரண்டு வாதங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் வர்த்தக நிலுவையானது நாணய மாற்று வீத மாற்றங்களால் எவ்வாறு பாதிக்கப்படும்? (04 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் பண்ட வர்த்தக மாற்று விகிதம் மேம்பாடு அடைவதன் முக்கியத்துவம் யாது? (03 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான தேய்வுக்கு இட்டுச்சென்ற ஐந்து காரணிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(i)- **முழுநன்மை :** முழுநன்மை என்பது ஒரு நாட்டை விட மற்றுமொரு நாடு ஒரு குறித்த பொருளை அல்லது சேவையை மிகவும் வினைத்திறனாக (குறைந்தளவு வளங்களை அல்லது குறைவான நேரத்தைப் பயன்படுத்தி)உற்பத்தி செய்யும் நிலைமையினைக் குறிக்கும். மறுவார்த்தைகளில் கூறுவதாயின் ஒரு குறித்த உற்பத்தியை மேற்கொள்வதில் மிகச்சிறந்த நிலையில் இருப்பதாகும்.

உதாரணம்: A மற்றும் B ஆகிய இரு நாடுகளைக் கருத்திற் கொள்வோம். B நாட்டுடன் ஒப்பிடுகையில் A நாடு குறைந்தளவு ஊழிய மணித்தியாலங்களையும் ஒரு சில மூலப்பொருள்களையும் பயன்படுத்தி கார்களை உற்பத்தி செய்ய முடியுமாயின் A நாடு கார் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டிருக்கும். (உதாரணம் அவசியமில்லை) **(02 புள்ளிகள்)**

- **ஒப்பீட்டு நன்மை:** ஒப்பீட்டு நன்மை என்பது ஒரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவினை சார்பளவில் மற்றொரு பொருளின் அமையச் செலவுடன் ஒப்பிட்டுக்காட்டும் ஒரு எண்ணக்கருவாகும். ஒரு நாட்டின் வர்த்தகப் பங்காளிகளுடன் ஒப்பிடுகையில் எந்தப்பொருளை குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்யலாம் என்பதை மதிப்பிடுவது பற்றியதாகும். **(02 புள்ளிகள்)**

(ii) **சர்வதேச வர்த்தகத்தில் பாதுகாப்புவாதத்திற்கு ஆதரவான கருத்துக்கள்:**

- **உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்:** தீர்வைகள் அனுமதிப்பங்குகள் போன்ற பாதுகாப்புக் கருவிகள் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்பளிக்கும். இது வெளிநாட்டுப் போட்டி காரணமாக கைத்தொழிகள் முறிவடைதலைத்தடுத்தல் தொழில்வாய்ப்புகளை பாதுகாத்தல் என்பவற்றிற்கு உதவும். குறிப்பாக பொருளாதார உறுதிப்பாட்டிற்கு அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமான துறைகளை இதன் மூலம் பாதுகாக்கலாம்.

- **உபாயரீதியிலான வர்த்தகக் கொள்கை:** சர்வதேச அளவில் போட்டித்தன்மைவாய்ந்ததாக மாறக்கூடிய எழுச்சிபெற்றுவரும் கைத்தொழில்களுக்கு ஆதரவு வழங்க உபாயரீதியில் பாதுகாப்பு வாதம் பயன்படுத்தப்படலாம். இக் கைத்தொழில்களை அவற்றின் இளம்பருவத்தின் போது பாதுகாப்பதன் மூலம் காலப்போக்கில் நாடுகள் உலக சந்தையில் போட்டியிடும் வல்லமையை எய்தலாம்.

- **தேசிய பாதுகாப்பு :** பாதுகாப்புக் கைத்தொழில்கள் போன்ற சில கைத்தொழில்கள் அல்லது முக்கியமான உட்கட்டுமானங்கள் தேசிய பாதுகாப்பிற்கு முக்கியமானதாகும். பாதுகாப்பு வாதம் இத்தகைய கைத்தொழில்கள் உள்நாட்டுக் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதிப்படுத்தி தேசத்தின் நலனை பாதுகாக்க உதவும்.

- **இளநிலைக் கைத்தொழில் பாதுகாப்பு வாதம்:** புதிய கைத்தொழில்கள் வினைத்திறனாகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் மாறும் வரையில் அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவது பொருளாதார வளர்ச்சியையும் பன்முகப்படுத்தலையும் ஊக்குவிக்கலாம். உள்நாட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்ய தற்காலிகமான பாதுகாப்பு அவசியமானதென இந்த வாதம் கூறுகிறது.

- **வர்த்தகக் குறைநிலையைக் குறைத்தல்:** பாதுகாப்புக் கருவிகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வர்த்தகக் குறைநிலையைக் குறைப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் சென்மதி நிலுவையை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

**(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் இரண்டு வாதங்களுக்கு 02 புள்ளிகள்)**

**பாதுகாப்பு வாதத்திற்கு எதிரான கருத்துகள்:**

- **வளங்களின் தவறான ஒதுக்கீடு:** பாதுகாப்பு வாதம் வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டிற்கு இட்டுச் செல்லலாம். கைத்தொழில்களைப் பாதுகாக்கும் போது போட்டிச்சூழ்நிலையின் கீழ் வினைத்திறனாகவும் புத்தாக்கம் புனைவதற்கும் இருந்த அதே ஊக்குவிப்புகள் அவற்றிற்கு இருக்காது. இது வளங்கள் வீணடிக்கப்படுவதற்கும் பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் இருக்கவும் காரணமாகலாம்

- **உயர்ந்த நுகர்வோன் விலைகள்:** தீர்வைகளும் அனுமதிப்பங்குகளும் பொதுவாக இறக்குமதிப்பொருள்களின் விலை அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும். இது நுகர்வோரின் கொள்வனவுச் சக்தியை குறைப்பதுடன் சந்தையில் தெரிவுகள் மட்டுப்படவும் காரணமாகும்

- **பதிலடி கொடுத்தல்:** ஒரு நாடு வர்த்தகப் பாதுகாப்புக் கருவிகளைப் பயன்படுத்தும் போது ஏனைய நாடுகளும் தமது வர்த்தகத் தடைகளைப் பயன்படுத்தி பதிலடி கொடுப்பதனால் பாதுகாப்புவாதக் கொள்கைகள் வர்த்தகப் போரை உருவாக்கலாம். இந்தப் பதிலடி வட்டம் மொத்த உலக வர்த்தகத்தை குறைப்பதுடன் தொடர்புடைய எல்லா நாடுகளினதும் பொருளாதாரங்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.

- **பொருளாதார நலன் வீழ்ச்சி:** பாதுகாப்பு வாதமானது நாடுகள் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ள பொருள்களை மட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதார நலனைக் குறைக்கமுடியும். இது வினைத்திறனற்ற வளப்பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லும்.

- **புத்தாக்கமும் போட்டித்தன்மையும்:** வெளிநாட்டு நிறுவனங்களுடனான போட்டியானது உள்நாட்டு நிறுவனங்களை புத்தாக்கங்களை நோக்கி நகர்த்தி மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக மாறச் செய்யும். பாதுகாப்பு வாதமானது இப்போட்டியை முடக்கிவிடும். இது குறைந்த புத்தாக்கங்கொண்ட குறைந்த இயங்குதிறன் வாய்ந்த உள்நாட்டுக் கைத்தொழில்களை உருவாக்கும்.

- **சிக்கல் தன்மையும் அதிகாரத்துவமும்:** பாதுகாப்புவாதக் கருவிகளை நடைமுறைப்படுத்தி செயற்பட வைப்பது சிக்கலானதுடன் அதிகாரத்துவம் மிக்கதுமாகும் இது அதிக நிர்வாகச் செலவுகளையும் பெரும்பாலும் ஊழல்களுக்கும் இட்டுச்செல்லும்.

- **வினைத்திறனற்ற வாரந்தேடல் :** பாதுகாப்புவாதம் வாரந்தேடல் நடத்தையினை ஊக்குவிக்கும் அதன்போது விசேடமான ஆர்வக்குழுக்கள் தமக்கு நன்மையளிக்கும் அதேவேளை பரந்தடிப்படையில் பொருளாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்காக பரப்புரை செய்து ஆதரவு தேடுவர். (Rent Seeking)

**(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் இரு வாதங்களுக்கு 02 புள்ளி**

**(மொத்தம் 04 புள்ளிகள்**

(iii) -குறுங்கால விளைவுகள்:

- **விலைகள் மீதான உடனடி விளைவுகள்:** ஒரு நாட்டு நாணயம் தேய்வடையும் போது (பெறுமதியை இழக்கும் போது) அதன் ஏற்றுமதிகள் வெளிநாட்டு நுகர்வோருக்கு மலிவானதாக மாறும் அதேவேளை இறக்குமதிகள் உள்நாட்டு நுகர்வோருக்கு விலையுயர்ந்ததாக மாறும். வெளிநாட்டு நுகர்வோர் இந்நாட்டின் பொருள்கள் கவரத்தக்கதாக இருப்பதனாலும் உள்நாட்டு நுகர்வோர் மலிவான உள்நாட்டுப் பதிலீடுகளை நோக்கி நகர்வதனாலும் இது ஆரம்பத்தில் ஏற்றுமதிகளில் ஒரு அதிகரிப்பிற்கும் இறக்குமதிகளில் ஒரு வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லலாம்

- **சீராக்கச் செயன்முறைக்கு காலமெடுக்கும்** என்பதை நாம் கருத்திற்கொள்வது முக்கியம். நாணயமாற்றுவீத மாற்றத்திற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் காரணமாக வர்த்தகத்தின் பருமன் குறுங்காலத்திலும் பெரிதாக இருக்கலாம். எனவே வர்த்தக நிலுவையின் மீதான உடனடி விளைவு வரையறுக்கப்பட்டதாக இருக்கலாம்.

**நீண்டகால விளைவுகள்:**

- **விலைக் கேள்வி நெகிழ்ச்சி:** காலப்போக்கில் ஒருநாட்டின் பொருள்கள் சேவைகள் மீதான கேள்வி நெகிழ்ச்சியானது ஒரு முக்கிய பணியினை ஆற்றுகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதிகள் சார்பளவில் விலை நெகிழ்வுள்ளதாயின் -விலை மாற்றங்களுக்கு உணர்திறன் மிக்கதாயின்- நாணயமாற்றுவீதத்தில் ஏற்படும் ஒரு தேய்வு ஏற்றுமதிப் பருமனில் கணிசமானளவு அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லலாம். மறுபுறம் ஒரு நாட்டின் இறக்குமதிகள் சார்பளவில் விலை நெகிழ்வுள்ளதாயின் ஒரு நாணயமாற்றுவீதத் தேய்வு இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.

- **உள்நாட்டு உற்பத்தி மீதான விளைவு:** தேய்வடைந்து செல்லும் ஒரு நாணயம் உள்நாட்டு உற்பத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும். ஏற்றுமதிகள் போட்டித்தன்மை மிக்கதாக மாறும்போது உள்நாட்டுக் கைத்தொழில்கள் அதிகரித்த கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டு உற்பத்தியை விரிவாக்கம் செய்யும். இதன்மூலம் ஏற்றுமதிகள் மேலும் அதிகரிக்கும். அதேவேளை இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழில்களும் விரிவாகும்.

- **வர்த்தக மீதி:**
தேய்வடைந்த நாணயம் காரணமாக அதிகரிக்கும் விலைகளுக்கு சீராக்கம் செய்வதற்கு இறக்குமதிப்பருமனுக்கு நீண்ட காலமெடுக்கும் என்பதனால் குறுங்காலத்தில் ஒரு நாடு வர்த்தகக் குறைநிலையை அனுபவிக்கலாம். காலப்போக்கில் நாட்டின் ஏற்றுமதிகள் குறைந்த விலைகளுக்கு நேர்க்கணிய ரீதியில் துலங்கலைக் காட்டுமாயின் அத்துடன் உள்நாட்டுக் கைத்தொழில்கள் உற்பத்தியை விரிவாக்குமாயின் வர்த்தக நிலுவை முன்னேற்றமடையமுடியும். காலப்போக்கில் நாடு இறக்குமதிகளை விட அதிகளவில் ஏற்றுமதி செய்வதன் மூலம் வர்த்தக மிகை உருவாகும் என்பது இதன் கருத்தாகும்.

- **இறக்குமதிச் செலவும் பணவீக்கமும்:** தேய்வடையும் நாணயம், ஏற்றுமதிகளை ஊக்குவித்து இறக்குமதிகளைக்குறைக்க முடியும் அதேவேளை அது இறக்குமதிசெய்யப்படும் மூலப்பொருள்களினதும் பொருள்களினதும் விலைகளை அதிகரிக்கும். இது நாட்டுக்குள் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தும்

(தலா 01 புள்ளி வீதம் 04 காரணிகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் பண்ட வர்த்தக மாற்றுவீதம் மேம்பாடடைவதன் முக்கியத்துவம்

- அதிகரித்த ஏற்றுமதி வருவாய் : வர்த்தக மாற்று விகிதத்தில் ஒரு முன்னேற்றம் என்பது இறக்குமதிகளுக்காக அது செலுத்தும் விலைகளைவிட சாதகமான விலைகளை அதன் ஏற்றுமதிகளுக்காகப் பெறுகிறது என்பதாகும். இது நாட்டிற்கு அதிக ஏற்றுமதி வருவாய்கள் கிடைக்க ஏதுவாகும். இது நாட்டின் மொத்த பொருளாதார அபிவிருத்தியையும் அதிகரிக்கும்.
- பொருளாதார வளர்ச்சி: மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதம் காரணமாகப் பெறப்படும் மேலதிக வருவாய் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யலாம். அந்த மேலதிக வருமானம் உட்கட்டுமானங்கள் கல்வி சுகாதாரம் மற்றும் ஏனைய அத்தியாவசியத் துறைகளில் பயன்படுத்தப்படலாம்.
- மேம்பட்ட வர்த்தக நிலுவை: வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்படும் ஒரு நேர்க்கணிய மாற்றம் பெரும்பாலும் இறக்குமதிகளைவிட ஏற்றுமதிகளை அதிகரிப்பதனால் வர்த்தக நிலுவையில் ஒரு மேம்பாட்டை ஏற்படுத்தும். இது வர்த்தகக் குறைநிலைகளை குறைக்க உதவி மிகவும் சாதகமான சென்மதி நிலுவைக்குப் பங்களிப்புச் செய்யும்
- முன்னேற்றகரமான வாழ்க்கைத்தரம்: வருமான அதிகரிப்பின் காரணமாக தனிநபர்களும் வீட்டுத்துறையினரும் வாழ்க்கைத்தர மேம்பாட்டை அனுபவிக்கலாம். அவர்களிடம் பொருள்கள் சேவைகளின் மீது செலவிட அதிகளவு செலவிடத்தக்க வருமானம் இருக்கும். அதனால் வாழ்க்கைத்தரம் மேம்படும்.
- குறைந்தளவு வெளியகப் பாதிப்புகள் : மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதத்தைக் கொண்டுள்ள ஒரு நாடு வெளியக பொருளாதார அதிர்ச்சிகளால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. அதன் ஏற்றுமதிகளின் பெறுமதிகள் சார்பளவில் நிலையாக இருப்பதால் உலகப்பொருள் விலைத்தளம்பல்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியும்.
- அரச பாதீட்டின் மீதான நேர்க்கணிய விளைவுகள்: மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதம் உள்ளபோது ஏற்றுமதி வரிகள் மூலம் அரசாங்கம் அதிக வருவாய் திரட்டலாம். இம்மேலதிக வருவாய் பொதுச் செலவினங்களுக்கும் வரவுசெலவுத்திட்டக் குறைநிலையை குறைக்கவும் போதுத்துறை முதலீடுகளை மேற்கொள்ளவும் பயன்படலாம்.
- முதலீடும் அபிவிருத்தியும் : மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதம் வெளிநாட்டு முதலீடுகளைக்கவர்ந்து பொருளாதார வளர்ச்சிக்குப்பங்களிப்புச் செய்யலாம். முதலீட்டாளர்கள் மேம்பட்ட பொருளாதாரச் சாத்தியங்கள் காரணமாக நாட்டை கவர்ச்சிகரமான இடமாக நோக்குவர்.
- பன்முகப்படுத்தும் வாய்ப்புகள் : மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதத்தைக் கொண்டுள்ள நாடுகள் தமது பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தவும் சிறியவீச்சிலான பொருள்களில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவும் வாய்ப்பிருக்கும்.
- குறைவான பணவீக்க அழுத்தங்கள்: மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதம் காரணமாக ஏற்றுமதி வருவாய்களுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவுகள் குறைவாக இருக்கும். இறக்குமதிச் செலவுகள் குறைவாக இருப்பதால் பணவீக்க அழுத்தங்கள் தடுக்கப்படலாம் .
- மேம்பட்ட பொருளாதார உறுதிநிலை: மேம்பட்ட வர்த்தக மாற்று விகிதம் அதிகரித்த பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் வெளிநாட்டு சமமின்மைகள் குறைவடையவும் நாணயமாற்றுவீதம் நிலைபெறவும் நாட்டின் பொருளாதார சாத்தியங்கள் பற்றிய நம்பிக்கைகள் ஏற்படவும் ஏதுவாகும்.

(தலா 01 புள்ளி மூன்று காரணிகளுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)

(v) **அண்மைய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் கூர்மையான தேய்வுக்கு இட்டுச்சென்ற காரணிகள்:**

- **சென்மதி நிலுவைக் குறைநிலை:** ஏற்றுமதிகளை விட இறக்குமதிகள் தொடர்ச்சியாக உயர்வாக இருக்கும் நிலையில் குறைநிலையில் உள்ள வர்த்தக நிலுவையும் நடைமுறைக்கணக்கு நிலுவையும் வர்த்தக சமமின்மையை நிதியீட்டம் செய்ய வெளிநாட்டு நாணயத்தின்மீது குறிப்பிடத்தக்களவு கேள்வியை உருவாக்கும். வெளிநாட்டு நாணயத்திற்கான அதிகரித்த கேள்வி இலங்கை ரூபாவின் தேய்வுக்கு இட்டுச்செல்லலாம்.
- **வெளிநாட்டுக் கடன் சுமை:** இலங்கை உட்கட்டுமானத்திட்டங்களுக்காகவும் அரச செலவினங்களை நிதியீட்டம் செய்யவும் வெளிநாட்டுக் கடன்பெறலில் அதிகளவு தங்கியிருந்தமையானது வெளிநாட்டுக்கடன்கள் உயர்மட்டத்தை அடையக் காரணமாகின. இக்கடன்களை சேவைசெய்ய இலங்கைரூபா தொடர்ச்சியாக வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றப்பட்டு வெளிச் செல்வதை அவசியமாக்கியுள்ளது. இது வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வியை அதிகரித்து இலங்கை ரூபாவின் தேய்விற்கும் பங்களித்துள்ளது.
- **பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற நிலை:** அரசியல் உறுதிப்பாடின்மையும் கொள்கை நிச்சயமற்ற தன்மையும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைச் சிதைப்பதுடன் மூலதன வெளியேற்றத்திற்கும் காரணமாகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீட்டை மீளப்பெற்று இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றும் போது இலங்கைரூபாவின் நாணயமாற்றுவீதத்தின் மீது அது மேலதிக அழுத்தங்களை ஏற்படுத்தும்
- **உலகப் பொருளாதாரக் காரணிகள் :** உலகப்பொருள்விலைகள்சர்வதேசமூலதனப்பாய்ச்சல்களில் ஏற்படும் தளம்பல்கள் மற்றும் கோவிட் 19 போன்ற பரந்தளவிலான பொருளாதார நிகழ்வுகள் போன்ற வெளியக அதிர்ச்சிகளும் பொருளாதார நிலைமைகளும் நாணய மாற்றுவீதங்களைப் பாதிக்கும். உதாரணமாக உலக நிரம்பல் சங்கிலியில் ஏற்படும் பாதிப்புகளும் கொள்ளைநோய்க்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இலங்கையின் வர்த்தக நிலுவையிலும் இலங்கைரூபாவின் பெறுமதியிலும் பாதிப்பை ஏற்படுத்தின.

* எரிபொருளின் விலை அதிகரிப்பு

**மத்திய வங்கியின் தளர்வான பணக்கொள்கை காரணமாக நாணய மாற்றுவீதத்தின் மீது ஏற்பட்ட அழுத்தங்கள்**

**பணவீக்க அதிகரிப்பு காரணமாக இலங்கை ரூபாவின் மீது ஏற்பட்ட அழுத்தங்கள்**

**(ஒவ்வொன்றிற்கு 01 புள்ளி வீதம் 05 காரணிகளுக்கு 05 புள்ளிகள்)**

9. (i) பல்பரிமாண வறுமைக் குறிகாட்டியானது மூன்று பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம் மூன்று பரிமாணங்களும் யாவை? (03 புள்ளிகள்)

(ii) உலக வங்கியானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் கணிப்பிடப்படும் தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளை நான்கு வகுதிகளாகப் பிரித்துள்ளது. அந் நான்கு வகுதிகளும் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் தொழினுட்ப முன்னேற்றத்தின் பணியை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) கட்டமைப்பு வேலையின்மையையும் சகடோட்ட வேலையின்மையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(v) தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஐந்து பிரதான சமூக வலைப்பின்னல் திட்டங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(i) - **சுகாதாரப் பரிமாணம் :** இக் கூறானது சிசு மரணவீதம் (5 வயதாகுமுன் மரணிக்கும் சிசுக்களின் சதவீதம்) போஷாக்கு (நிறைகுறைந்த குழந்தைகள் சதவீதம்) ஆகிய சுகாதாரம் மற்றும் போஷாக்கு தொடர்பான குறிகாட்டிகளை மதிப்பிடுகிறது.
- **கல்விப்பரிமாணம்:** கல்விப்பரிமாணமானது கல்வி பெறுதல் மற்றும் அடைவுகள் பற்றிய குறிகாட்டிகளை உள்ளடக்குகிறது. பாடசாலை செல்லாத பிள்ளைகளின் சதவீதம் ஆரம்பக்கல்வி போன்ற குறித்த மட்டக் கல்வியைப் பூர்த்தி செய்யாத பிள்ளைகளின் சதவீதம் போன்ற பொதுவான குறிகாட்டிகள் இதில் உள்ளடங்குகின்றன.
- **வாழ்க்கைத்தரப் பரிமாணம்:** இப்பரிமாணம் வாழ்க்கை நிலைமைகளையும் அடிப்படை தேவைகளையும் சொத்துகளையும் மதிப்பிடுகிறது. சுத்தமான குடிநீரைப் பெறல் கழிவகற்றல் வசதிகள் சமையலுக்கான எரிபொருள் மின்சாரம் மற்றும் வீட்டின் தரம் ஆகிய குறிகாட்டிகள் இதில் உள்ளடங்குகின்றன.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)**

(ii) - குறைந்த வருமானம் பெறும் நாடுகள் (LICs)
- குறைந்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் (LMCs)
- உயர்ந்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் (UMCs)
- உயர்வருமானம் பெறும் நாடுகள் (HICs)

**(ஒவ்வொரு குழுவுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) - **அதிகரித்த உற்பத்தித் திறன்:** தொழில்நுட்ப முன்னேற்றம் பெரும்பாலும் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் உற்பத்தித் திறன் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்கிறது. முன்னேற்றகரமான இயந்திரங்கள் அல்லது வினைத்திறன் மிக்க உற்பத்தி முறைகள் போன்ற புதிய தொழில் நுட்பங்கள் காரணமாக ஒரேயளவு அல்லது முன்னரைவிடச் சிறியளவு வளங்களைக்கொண்டு அதிக பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய முடியும். இது பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்

- **வளங்களின் வினைத்திறன்:** தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதாரங்கள் தமது வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்த உதவும். வரையறுக்கப்பட்டளவு வளங்களைக்கொண்டுள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இது மிக முக்கியமானதாகும். உதாரணமாக விவசாயத்துறையில் ஏற்படும் புத்தாக்கங்கள் அதிய விளைச்சலைத்தருவதனால் மேலதிக நிலத்தையோ ஊழியர்களையோ பயன்படுத்தும் தேவையில்லை.

- **போட்டித்தன்மை:** புதிய தொழில் நுட்பங்களில் முதலீடு செய்து அவற்றைப்பயன்படுத்தும் நாடுகள் உலக சந்தையில் அதிக போட்டித் தன்மை கொண்டவையாக இருக்கும். தொழில் நுட்ப முன்னேற்றங்கள் நிறுவனங்கள் குறைந்த செலவில் தரமிக்க பொருள்களை உற்பத்தி செய்வதைச் சாத்தியமாக்குகிறது. இதனால் அவை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் போட்டித்தன்மை மிக்கனவாக மாறும்.

- **கட்டமைப்பு மாற்றங்கள்:** தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தும் புதிய தொழில் நுட்பம் தோற்றம் பெறும்போது அது நாட்டின் வெளியீட்டின் உள்ளடக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். உதாரணமாக உயர்தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் போது அது விவசாயத்தை முதன்மையாகக் கொண்ட நடவடிக்கைகளிலிருந்து கைத்தொழில் அல்லது சேவைகளை அடிப்படையாகக் கொண்ட துறைகளை நோக்கி நகரும். இது பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும்

- **புத்தாக்கமும் முயற்சியாண்மையும்:** பொருளாதார அபிவிருத்திக் கோட்பாடுகள் பல பொருளா-தார அபிவிருத்தியை இயக்கிச் செல்வதில் புத்தாக்கத்தினதும் முயற்ச்சியாண்மையினதும் முக்கியத்துவத்தை அழுத்தியுரைக்கின்றன. தொழில் நுட்ப முன்னேற்றத்தை இந்நடவடிக்கைகளின் இதயமாகக் கொள்ளலாம் ஏனெனில் தொழில் முயற்சியாளர்களும் புத்தாக்கம் புனைவோரும் புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் முறைமைகளையும் உருவாக்குகின்றனமையினாலாகும்.

- **மனித மூலதன அபிவிருத்தி:** தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு திறன்மிக்க தொழிற்படை அவசியமானதாகும் இதனால் கல்வி மீதான முதலீடுகளையும் மனித மூலதன அபிவிருத்தியையும் ஊக்குவிக்கிறது. கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை தரும் நாடுகள் புதிய தொழில் நுட்பங்களை உருவாக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் சிறந்த நிலையில் உள்ளன. இது நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும்.

- **அறிவின் பரவலாக்கல் தொழில் நுட்ப முன்னேற்றம்:** அறிவையும் கருத்துக்களையும் உலக அளவில் பரவச் செய்யும். வர்த்தகம் வெளிநாட்டு முதலீடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக பிற இடங்களில் மேற்கொள்ளப்படும் தொழில் நுட்பங்களால் நாடுகள் நன்மையடையலாம். இது அந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தும்.

- **சுற்றாடல் பேண்தகுதன்மை:** சுற்றுச்சுழலுக்கு பேண்தகு தன்மைகொண்ட தொழில் நுட்பங்களின் முக்கியத்துவம் பற்றி சில அபிவிருத்திக் கோட்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. புதுப்பிக்கத்தக்க சக்திவளம் சுத்தமான போக்குவரத்து பேண்தகு விவசாயம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் சுழல் மாசடைவதைக் குறைத்து பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கலாம்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் ஏதேனும் 04 காரணிகளுக்கு 04 புள்ளிகள்)**

iv) - **கட்டமைப்பு வேலையின்மை:** தொழில் நுட்ப மாற்றங்கள் நுகர்வோர் சுவை மாற்றங்கள் அல்லது கைத்தொழில் கட்டமைப்பு மாற்றங்கள் போன்ற பொருளாதாரத்தின் நீண்டகால மாற்றங்கள் மற்றும் சமமின்மைகள் என்பவற்றால் கட்டமைப்பு வேலையின்மை உருவாகலாம்.

- தொழில்படையின் தகைமைகள் மற்றும் திறன்களுக்கும் பொருத்தமான வேலைவாய்ப்புகளுக்கும் இடையில் நிலவும் பொருத்தப்பாடின்மை காரணமாக இது உருவாகலாம்.

- இது நீண்டகாலத்திற்கு நீடித்திருப்பதுடன் குறுங்காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்படும் நிலைமைகளால் பாதிக்கப்படுவதில்லை. பொருளாதாரம் சிறந்த நிலையில் உள்ளபோதிலும் இது ஏற்படலாம்
**(02 புள்ளிகள்)**

- **சகடோட்ட வேலையின்மை:** வர்த்தகச் சகடோட்டத்துடன் இது நேரடியாகத் தொடர்பு பட்டதாகும். பொருளாதாரப்பின்னடைவுகளின் போது பொருள்கள் சேவைகள் மீதான மொத்தக் கேள்வி குறைவதனால் குறைவான உற்பத்தியும் அதன் காரணமாக வேலையின்மையும் ஏற்படும்

- இவ்வேலையின்மை பொதுவாக பொருளாதாரச் சகடோட்டத்துடன் தொடர்பு பட்டிருப்பதால் இது தற்காலிகமானதாகும். பொருளாதாரம் பின்னடைவை சந்திக்கும் போது சகடோட்ட வேலையின்மை அதிகரிக்கும். பொருளாதாரம் விரிவடையும் போது அது குறைவடையும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(v) **தற்போது இலங்கையில் நடைமுறைக்கிடப்பட்டுள்ள முக்கிய சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் நிகழ்ச்சித் திட்டங்கள் :**

(அ) பொதுத்துறைப் பணியாளருக்கான சமூக பாதுகாப்பு :
- பொதுத்துறைப்பணியாளருக்கான ஓய்வூதியத் திட்டம் முறைமை
- விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம்
- பொதுத்துறைப்பணியாளருக்கான ஊழியர் சேமலாப நிதி
- ஊழியர் நம்பிக்கை நிதியம்
- அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித்திட்டம்

(ஆ) முறைசார்ந்த தனியார் துறை பணியாளருக்கான சமூகக் காப்புறுதி
- ஊழியர் சேமலாப நிதியம்
- ஊழியர் நம்பிக்கை நிதியம்

(இ) சமூக உதவித் திட்டங்கள்
- சமூர்த்தி அஸ்வெசும காசு மாற்றல் திட்டம்
- முதியோருக்கான உதவு தொகைகள்
- வலது குறைந்தோருக்கான உதவு தொகைகள்
- குறைந்த வருமானம் பெறும் சிறுநீரகநோயாளருக்கான கொடுப்பனவுகள்
- கர்ப்பிணித் தாய்மாருக்கான ஊட்டச்சத்து கொடுப்பனவுகள்

(ஈ) சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்புத்திட்டங்கள்
- இலவச பாடசாலை நூல் வினியோகம்
- இலவச பாடசாலைச் சீருடைத்துணி வினியோகம்
- பாடசாலை மற்றும் உயர்கல்விக்கான பருவகாலச் சீட்டு
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்த வரும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்
- தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 1-5 வரையிலான மாணவர்களுக்கான பகலுணவு
- திரிபோஷ தேசிய மேலதிக போஷாக்குத் திட்டம்

(உ) அவசரகால மீட்பு உதவித்திட்டம்

**(ஒன்றிற்கு 01 புள்ளி ஏதேனும் 05 திட்டங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

0. (i) (அ) 'உணவுப் பாதுகாப்பு' என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) தற்போது இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அண்மைக்காலத்தில் இலங்கையில் இருந்து இளைஞர்களும் நடுத்தர வர்க்க தொழில் வாண்மையாளர்களும் குடிபெயர்ந்து செல்வதன் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பேண்தகு அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் சுற்றாடல் பாதிப்புகளை குறைப்பதற்கும் 'சுற்றோட்டப் பொருளாதாரம்' என்னும் எண்ணக்கரு எவ்வாறு பங்களிப்புச் செய்யும்? (05 புள்ளிகள்)

(iv) கடன் மீள்கட்டமைப்புச் செயன்முறையூடாக பொதுப்படுகடனின் நிலைபேறுடைய தன்மையை அடைய சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை இலங்கைக்கு விதித்துள்ள பிரதானமான அளவுசார் இலக்குகள் யாவை? (06 புள்ளிகள்)

(i) - **உணவுப்பாதுகாப்பு** என்பது ஆரோக்கியமானதும் செயற்படுதன்மை மிக்கதுமான ஒருவாழ்க்கையை வாழத்தேவையான உணவுத்தேவையையும் உணவுபற்றிய விருப்பங்களையும் பூர்த்தி செய்யத்தக்க போஷாக்குடைய பாதுகாப்பான போதியளவான உணவை பௌதீக சமூக மற்றும் பொருளாதார ரீதியில் எல்லாமக்களும் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் எப்போதும் அடையக்கூடிய நிலைமை காணப்படல் ஆகும். இவ்வரைவிலக்கணம் உணவுப்பாதுகாப்பின் நான்கு பிரதான பரிமாணங்களை உள்ளடக்குகிறது. (2 புள்ளி)

- **கிடைப்பனவுத்தன்மை:** மக்களின் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி மூலமும் இறக்குமதி மூலமும் போதியளவானதும் தொடர்ச்சியாகவும் உணவு நிரம்பல் செய்யப்படவேண்டும்
- **அடையக் கூடிய தன்மை:** மக்கள் தமக்கு அவசியமான உணவைப்பெறத்தேவையான பொருளாதார மற்றும் பௌதீக வசதியைக்கொண்டிருக்க வேண்டும்.
- **பயன்பாடு:** நுகரப்படும் உணவு போதுமானளவு போஷாக்குடையதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும்.
- **நிலைத்த தன்மை:** உணவுப்பாதுகாப்பு எப்போதும் உணவைப் பெற்றுக்கொள்ளக்கூடியநிலையை அவசியமாகக் கருதுகிறது

**~~(02 புள்ளிகள்)~~**

**(ஆ) இலங்கையின் உணவுப்பாதுகாப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்:**

- **பொருளாதாரக் காரணிகள்:**
- **வறுமை:** உயர்மட்ட வறுமை மக்கள் போஷாக்கான உணவைப் பெறுவதில் வரையறைகளை ஏற்படுத்துகிறது. வறுமைநிலையானது 2019 இல் 11.3 சதவீதத்திலிருந்து 2020 இல் 12.7 சதவீதமாக அதிகரித்து 300000 பேரை புதியவறியவர்களாக இணைத்துள்ளது. 2021இல் அது தொடர்ச்சியாக அதிகரித்து 2021இற்கும் 2022 இற்கும் இடையில் 13.1 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக இரட்டித்துள்ளது. இது 2022இல் 12.5 மில்லியன் பேரை புதிதாக வறுமையினுள் தள்ளிவிட்டுள்ளது.

- **வேலையின்மை:** தொழில் இழப்புகளும் குறைந்த வேலைவாய்ப்புகளும் வருமானம் நிலையற்ற தன்மைக்கு இட்டுச்சென்று குடும்பங்கள் போதுமான உணவைப் பெற முடியாத நிலையை ஏற்படுத்தும்.

- **உணவுப்பணவீக்கம்:** 2021 இலிருந்து இலங்கை தீவிரமான உணவு நெருக்கடியை எதிர்நோக்கிய வருகிறது.இது வளமாக்கிகள் அரிசி மற்றும் ஏனைய உள்ளீடுகளின் விலையதிகரிப்பினால் ஏற்பட்டது. உணவுப்பணவீக்கமே உணவுப்பாதுகாப்பின்மைக்கான பிரதான காரணமாகும். உலகவங்கி அறிக்கையின்படி உயர்ந்த உணவுப்பணவீக்கம் கொண்ட 10 நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில்

உள்ளது. தொகை மதிப்புத்திணைக்களத்தின் படி ஒக்டோபர் 2022 இல் கொழும்பின் உணவுப்பணவீக்கம் 90.9 சதவீதமாகும். இது மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கு பிரதான உணவாகிய அரிசியை பெறமுடியாத நிலையினை ஏற்படுத்தியது.

- **இறக்குமதிக் கட்டுப்பாடுகள்:** அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதிகள் மீது அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகளால் சில பொருள்கள் நாட்டில் கிடைக்காமல் போயின.

- **அரசியல் மற்றும் தாபனரீதியான காரணிகள்:**
- **கொள்கை நிலையற்ற தன்மை:** விவசாயம் வர்த்தகம் மற்றும் உணவு விநியோகம் தொடர்பான பொருந்தாத கொள்கைகள் உணவுப்பாதுபாதுகாப்பின்மைக்கு பங்களித்தன. இலங்கையின் உணவுப்பாதுகாப்பின்மையானது தற்போது எதிர்நோக்கப்படும் பொருளாதார நெருக்கடியினாலும் கொள்கைவகுப்பாளர்களின் தூரநோக்கற்ற கொள்கைகளின் விளைவாகவும் ஏற்பட்டதாகும். 2021 மே மாதத்தில் இலங்கை அரசாங்கம் இரசாயன வளமாக்கிகளையும் கிருமிநாசினிகளையும் இறக்குமதிசெய்வதை தடைசெய்ய எடுத்த தீர்மானம் முக்கியமான விவசாய உற்பத்திகளில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

- **ஊழல்:** உணவு வளங்களையும் உதவிகளையம் விநியோகிப்பதில் ஊழல் நடைமுறைகள் உணவுப்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனைப்பாதிக்கும்.

- **உணவு விரயமாதல்:** இலங்கையில் உணவு விரயம் அதிர்ச்சி தரும் வகையில் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. நாளாந்த பத்திரிகைகளில் எரிபொருள் பற்றாக்குறை பலவீனமான விநியோகம் தளம்பலடையும் விலைகள் என்பவற்றால் அரிசி மரக்கறிவகைகள் இழக்கப்படுவதான செய்திகயைப் பார்க்க முடியும்

- **சுற்றாடல் காரணிகள்:**
- **காலநிலை மாற்றம்:** காலநிலை மாற்றங்களால் விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டு உணவு உற்பத்தி குறைவடையும். காலநிலை மாற்றங்களால் இலங்கை கணிசமானளவு அச்சுறுத்தலை எதிர்நோக்குகிறது. தீவிர வரட்சி கடுமையான மழைவீச்சி போன்ற தீவிர நிகழ்வுகளால் உணவுபயிரிடும் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டு சுமார் 900000 மக்கள் உணவுப்பதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக FAO மற்றும் WFP ஆகிய நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

- **இயற்கைப் பேரழிவுகள்:** இலங்கை வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகிய இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு உணவுப்பற்றாக்குறை ஏற்படுகின்றது.

- **பூகோளவியல் காரணிகள்:** 2020 நடுப்பகுதியில் இருந்து உலகளாவிய ரீதியில் உணவுப்பொருள் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளன. கோவிட் 19 கொள்ளைநோய் அதனைத்தொடர்ந்து ஊக்ரேன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு என்பன உணவுப்பணவீக்கத்தை மேலும் அதிகரித்ததுடன் உணவு இறக்குமதிச் செலவினங்களையும் உயர்த்தின. அதேபோல் மசகெண்ணெய் விலை அதிகரிப்பும் வளமாக்கி உற்பத்தியில் ஏற்பட்ட தடைகளும் வளமாக்கிகளின் விலைகளையும் அதிகரித்தன.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று காரணிகளுக்கு 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

(ii) **நேர்க்கணிய பொருளாதார விளைவுகள்:**

- **பண அனுப்பல்கள் :** வெளிநாடுகளில் தொழில் புரியும் வாண்மையாளர்களும் தொழில் வல்லுநர்களும் தமது நாட்டிற்கு பணஅனுப்பல்களை மேற்கொள்கின்றனர். இப்பண அனுப்பல்கள் அவர்களது குடும்பங்களுக்கு குறிப்பிடத்தக்களவு வருமான மூலாதாரங்களாகும். இது நுகர்வு அதிகரிக்கவும் வாழ்க்கைத்தர மேம்பாடு ஏற்படவும் காரணமாகும்.

- **திறன் பரிமாற்றம் :** வெளிநாட்டில் தொழில் புரியும் போது சில வாண்மையாளர்கள் புதிய திறன்களையும் அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம் அவர்கள் நாடுதிரும்பும்போது அவற்றை நாட்டுக்குள் கொண்டுவரலாம். இது நாட்டின் மனிதமூலதனத்தை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கலாம்.

- **அந்நியச் செலாவணி உழைப்புகள்:** பணஅனுப்பல்கள் மூலம் இலங்கை பெறும் அந்நியச் செலாவணி நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை அதிகரிக்கலாம். இதனை இறக்குமதிகளை நிதிப்படுத்தவும் நாணயமாற்றுவீதத்தை நிலைப்படுத்தவும் பயன்படுத்தலாம்

- **வேலையின்மை குறைவடைதல்:** குடியகல்வு இலங்கை வாண்மையாளர்களுக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டில் வேலையின்மை அழுத்தங்களை நீக்கிவிடலாம். இது நாட்டில் வேலையின்மை வீதத்தைக் குறைவடையச் செய்யும்

- **முதலீடு:**
  சில வெளிநாட்டுத் தொழில் வல்லுநர்கள் இலங்கையின் வியாபாரங்களிலோ அல்லது வீட்டுமனைகளிலோ முதலீடு செய்யலாம். இது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் சாத்தியம் உண்டு.

**எதிர்க்கணிய பொருளாதார விளைவுகள்:**

- **மூளைசாலிகள் வெளியேற்றம்:** மத்தியவகுப்பு வாண்மையாளர்கள் பேரளவில் குடியகல்வதால் நாடு கல்விகற்ற திறமையான தொழிற்படையை இழப்பதனால் மூளைசாலிகளின் வெளியேற்றம் தோற்றம் பெறலாம். இது பொருளாதார வளர்ச்சியையும் ஆய்வு மற்றும் அபிவிருத்தியையும் புத்தாக்கங்களையும் தடைசெய்யும்.

- **பணஅனுப்பல்களில் தங்கியிருத்தல்:** குடிபெயர்ந்தவர்கள் அனுப்பும் பணஅனுப்பல்களில் அதிகம் தங்கியிருத்தலானது பொருளாதார பாதிப்புறும் தன்மையை அதிகரிக்கும். உலகப்பொருளாதாரத்தில் ஏற்படும் தளம்பல்கள் அல்லது குடிபெயர்பவர்கள் செல்லும் நாடுகளின் குடிவரவுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியன பணஅனுப்பல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்

- **மூப்படையும் சனத்தொகை:** நடுத்தரவகுப்பு வாண்மையாளர்கள் குடிப்பெயரும் போது அவர்கள் வயது முதிர்ந்த குடித்தொகையை விட்டுச் செல்கின்றனர் . இது சுகாதாரம் மற்றும் சமூக சேவைகளில் அழுத்தங்களை ஏற்படுத்துவதனால் இவற்றின் மீது அரசாங்கசெலவினங்கள் அதிகரிக்கும்.

- **வரிவருவாய் இழப்பு:** தொழில் வாண்மையாளர்களும் வல்லுநர்களும் நாட்டைவிட்டுச் செல்லும்போது அரசாங்கம் வரிவருவாயை இழக்கலாம். இது பொதுச் சேவைகளையும் உட்கட்டுமான அபிவிருத்தியையும் பாதிக்கும்.

**(ஒவ்வொன்றில 01 புள்ளி ஏதேனும் 04 பொருளாதார விளைவுகளுக்கு 04 புள்ளிகள்)**

(iii) சுற்றோட்டப்பொருளாதார எண்ணக்கருவும் பேண்தகு அபிவிருத்தியும். :

- சுற்றோட்டப் பொருளாதார எண்ணக்கருவானது வளங்களை அகழ்தல் உற்பத்தி செய்தல் நுகர்வு செய்தல் மற்றும் கழிவகற்றல் உள்ளடக்கிய மரபு ரீதியான நேர்கோட்டு பொருளாதார மாதிரிகளை மீளச் சிந்தித்து பேண்தகு தன்மையை ஊக்குவிப்பதுடன் சுற்றாடல் மீதான பாதிப்புகளைக் குறைக்கிறது. அதற்குப்பதிலாக சுற்றோட்டப் பொருளாதாரமானது ஒரு மூடிய வளைய அமைப்பினை உருவாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. இம்முறையில் உற்பத்திகள் பொருள்கள் மற்றும் வளங்கள் மீளப்பயன்படுத்தப்பட்டு மீள்சுழற்சிக்குட்பட்டு மறுபயன்பாட்டிற்குட்பட்டு அதன் மூலம் கழிவுகளின் வெளியேற்றமும் சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்குகளும் இழிவுபடுத்தப்படும். சுற்றோட்டப் பொருளாதாரம் பேண்தகுதன்மையை ஊக்குவித்து சுற்றாடல் மீதான தாக்கத்தைக் குறைவடையச் செய்யும் சில முக்கிய வழிகள் பின்வருமாறு:

- **வளங்களின் வினைத்திறன்:**
  தற்போதுள்ள வளங்களை உச்சளவில் பயன்படுத்தி புதிய வளங்களுக்கான தேவையைக் குறைத்தலும் வளங்கள் அருகிச் செல்வதைக் இழிவுமட்டத்திற்குக் கொண்டுவருதலும்

- **கழிவுகளைக் குறைத்தல்:**
  நெடுவாழ்வுடைத்தன்மையினையும் மீளப்பயன்படுத்தக்கூடிய தன்மையினையும் கருத்திற்கொண்டு பொருள்களையும் முறைமைகளையும் வடிவமைப்புச் செய்வதன் மூலம் கழிவுகளின் உருவாக்கத்தை பெருமளவில் குறைத்தல்

- **உற்பத்திப் பொருளின் ஆயுட்கால நீடிப்பு:**
  நெடுவாழ்வு கொண்ட திருத்தங்கள் செய்யத்தக்க , தரத்தை அதிகரிக்கக் கூடிய அத்துடன் ஆயுட்காலத்ததை நீடிக்கத்தக்க பொருள்களை உருவாக்குவதில் கவனஞ் செலுத்தல்.

- **கார்பன் தடங்களைக் குறைத்தல்:**
  கைத்தொழில் உற்பத்திகளின் போதும் போக்குவரத்தின் போதும் அவசியமான சக்திவளத்தையம் உற்பத்தி உள்ளீடுகளையும் குறைப்பதன் மூலம் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை இழிவுமட்டத்திற்குக் கொண்டுவருதல்.

  கனிய வளங்கள் மற்றும் படிம எரிபொருள் போன்ற வறையறுக்கபட்ட நிரம்பல் கொண்ட வளங்கள் அருகி- வரும் வேகத்தைக் குறைத்தல்

**(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் 05 காரணிகளுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

(iv) IMF உடன்படிக்கையின்படி இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள முக்கிய அளவுசார் இலக்குகள்

- IMF பேண்தகு தன்மை ஆய்வின் (DSA) படி கடன் மீள்கட்டமைப்பு ஊடாக இலங்கை அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கடன் பேண்தகுதன்மை இலக்குகளாவன:

- **கடன் இருப்பின் அளவு:** கடன் இருப்பின் அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவீதமாகக் குறைத்தல்.

- **மொத்த நிதியிடல் தேவைப்பாடு:** மத்திய அரசாங்கத்தின் சராசரி மொத்த நிதியிடல் தேவைப்பாட்டை 2027- 2032 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதத்திற்குக் குறைவாகப் பேணுதல்.


Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

- **திட்ட நிறைவுக்குப் பின்னரான வெளிநாட்டுக் கடன் சேவை:** 2027-2032 காலப்பகுதியில் மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய கடன் சேவையை வருடாந்தம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் குறைவாகப் பேணுதல்

- **செயற்திட்ட நிதியிடல் இடைவெளி:** 2023-2027 காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியிடல் இடைவெளியை நிரப்பப் போதுமானளவுக்கு கடன் சேவையினைக் குறைத்தல். அதிகாரிகள் வழங்கியுள்ள அடிப்படை மட்ட நிலைமைகளின் கீழ் 17 பில்லியன் டொலர் கடன் சேவைக்குறைப்பு தேவைப்படுகிறது. அதில் 2022 இல் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள தொகைகளும் உள்ளடங்கும்

**(ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் 03 இலக்குகளுக்கு மொத்தம் 06 புள்ளிகள்)**

5 8
5 8
3 4
2
17 5
2

(40) WWW.PastPapers.WiKi (40)



Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

## සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න